REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2024 ஓகஸ்ட் 1 வியாழக்கிழமை
92 ANNIVERSARY
வருட. 92 இல. 182 | Thursday 01, August, 2024 | 20பக்கங்கள் | 50/-

## இன்னும் சில தினங்களில் பால் மா விலை குறையும்
**அமைச்சர் நளின் பெர்னாண்டோ**

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலைகளை சில தினங்களில்குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பால் மா இறக்குமதியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்து 06

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு அர்ப்பணிப்போம்**

# SLPP, UNP முன்னாள் மாகாண, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 116 பேர் உறுதிமொழி

பாரபட்சமின்றி நாட்டை புதிய கோணத்தில் முன்னோக்கி கொண்டு செல்லவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத்திய அரசாங்கம், 09 மாகாண அரசாங்கங்கள் உள்ளடங்கலாக 10 அரசாங்கங்களின் கீழ், அனைவருக்கும் பொறுப்புகளை வழங்கி நாட்டை முன்னேற்றுவதாக உறுதியளித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளுடன் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று (31) நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு அர்ப்பணிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் 116 முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

"நாட்டில் வளர்ச்சி கண்டுவரும் பொருளாதாரத்தை பாதுகாத்து முன்னோக்கி கொண்டு 06





- பாரபட்சமின்றி நாட்டை புதிய கோணத்தில் முன்னோக்கி கொண்டு செல்லவே தேர்தலில் போட்டியிடுகிறேன்
- மத்திய, மாகாண அரசுகள் உள்ளடங்கலாக அனைவருக்கும் பொறுப்புகள் வழங்கி நாட்டை முன்னேற்றுவேன்

## அமைச்சர் பந்துல குணவர்தனவின் கடன் அட்டையிலிருந்து பணமோசடி
**முன்னாள் செயலாளரை CID விசாரணை**

லோரன்ஸ் செல்வநாயகம்

அமைச்சர் பந்துல குணவர்தனவின் கடன் அட்டையை அவரது அனுமதியின்றி உபயோகித்துள்ள சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் நீதவான் ஹர்ஷன கெகுனுவெல முன்னிலையில் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன முன் வைத்துள்ள முறைப்பாட்டுக்கு இணங்க, 06

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஒத்துழைப்பு
**SLFP மத்திய குழு நேற்று அறிவிப்பு**

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து இது பற்றி அறிவித்துள்ளது. அமைச்சர்களான மஹிந்த அமரவீர மற்றும் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோரடங்கிய குழுவினரே இதை அறிவித்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மூன்று பிரிவுகளாக உடைந்துள்ள நிலையிலே, இதில் ஒரு குழுவினர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

## ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை தற்போது சமர்ப்பிக்க வேண்டாம்
**இளம் MP ஒருவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை**

ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டாமென, இளம் பாராளுமன்ற உறுப்பினரொருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது பரபரப்பாகப் பேசப்படும் ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை, எதிர்வரும் பதினைந்து நாட்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. இச்சந்தர்ப்பத்திலேயே, இளம் பாராளுமன்ற உறுப்பினரொருவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் 06

**ஈரான், உலக நிலைமை;**

## இலங்கை குறித்து ஆராய மூன்று விஷேட குழுக்கள்

ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக, ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலக நாடுகளில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு மூன்று விஷேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

முன்ஆயத்த ஏற்பாடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மூன்று விசேட குழுக்களை நியமித்துள்ளார்.

இதன்படி, தேசிய பாதுகாப்பு தொடர்புக்கு விசேட குழுவொன்றும், பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவும், இந்த இரண்டு குழுக்களின் செயற்பாடுகளை 06

## ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் கொலைக்கு ஜனாதிபதி கண்டனம்



ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் படுகொலையை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாதெனவும், அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அந்த அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளருமான இஸ்மாயில் ஹனியா கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் வைத்து ஹனியா கொலை செய்யப்பட்டுள்ளார். 06

**பொருளாதார சரிவை சந்தித்து**

## வீழ்ந்த நாட்டை இரண்டு வருடத்தில் மீட்பது அதிசயம்



கடுமையான பொருளாதாரச் சரிவைச் சந்தித்த நாட்டை இரண்டு ஆண்டுகள் என்ற குறுகிய காலத்தில் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்தது அதிசயமாகும்.

உலகில் இவ்வாறான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்த எந்தவொரு நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் ஸ்திரத்தன்மையை அடையவில்லை என முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அறிவு, அனுபவம் மற்றும் உலகளாவிய தொடர்புகளின் அடிப்படையில் வீழ்ந்த நாட்டை மீட்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06

## யாழ்., கிழக்கு பல்கலைக்கழகங்களில் சித்த மருத்துவ பீடங்கள் தரமுயர்வு
**அமைச்சர் டக்ளஸின் இன்னுமொரு முயற்சி வெற்றி**



யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக் கழகங்களில் இயங்கி வருகின்ற சித்த மருத்துவ கற்கைகளை சித்த மருத்துவ பீடங்களாக தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளார். 06

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கட்டுப்பணம் செலுத்தினார்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கான கட்டுப்பணத்தை கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்று தேர்தல் செயலகத்தில் 06



03

நாட்டின் பொருளாதார பாதுகாப்புக்காக
பஞ்ச ஆயுதங்களுடன் களமிறங்கும் ஒரே வேட்பாளர் ரணில் மட்டுமே



03

கேரளா, மண்சரிவு: உயிரிழப்பு 162
ஆற்றில் மிதந்த 60 உடல்கள் மீட்பு
மீண்டும் மண்சரிவு ஏற்படலாமெனவும் எச்சரிக்கை

**தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு**

## கம்பனிகளின் முன்மொழிவு அரசாங்கத்திடம் கையளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக கம்பெனிகள் முன்மொழிவொன்றை அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சம்பள நிர்ணய சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இது தொடர்பில் தமக்கு எவ்வித உத்தியோகபூர்வ அழைப்பும் கிடைக்கவில்லையெனவும் முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளரான ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பதற்கான வர்த்தமானி, 06

## ஆகஸ்ட் 01 முதல் Online ரயில் ஆசன முன்பதிவு
**காலை 10 மணி முதல் ஆரம்பம்**

ரயில் பயணத்துக்கான ஆசனங்களை Online மூலமாக முன்பதிவு செய்யும் செயற்பாடுகளை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஆசன முன்பதிவுகள் தற்போது இரவு 07 மணிக்கே இடம்பெறுகின்றன. இருந்த போதும் நேரத்தை 2024 06

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் ஆகஸ்ட்டில்
**மாத இறுதிக்குள் வெளியீடு; 87,000 பேர் விண்ணப்பம்**

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை விரைவாக தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படுமெனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்காக 87,000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாக ஆணைக்குழு. 06

**புங்குடுதீவு மாணவி படுகொலை**

## குற்றவாளிகளின் மனு ஜனவரியில் விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆறு குற்றவாளிகள் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை, 2025 ஜனவரி 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய (2015) புங்குடுதீவில் பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் யாழ். மேல் நீதிமன்றத்தால் ஆறு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனை 06

**வாழைச்சேனை, பதுறியா நகரில்**

## T 56 ரக துப்பாக்கிகளுடன் 43 வயது நபர் ஒருவர் கைது
**59 தோட்டாக்கள், கூரியவாளும் மீட்பு**

பாசிக்குடா தினகரன் நிருபர்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுறியா நகரில் இரண்டு ரீ 56 ரக துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களுடன் 43 வயது குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு (30) 10 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். 06

## Dr. அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு செப். 11க்கு ஒத்திவைப்பு
**பொலிஸில் முறைப்பாடு செய்யவும் உத்தரவு**

யாழ். விசேட நிருபர்

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு விசாரணைகள், எதிர்வரும் செப்டம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவதூறு ஏற்படுத்தியமை, கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட 05 முறைப்பாடுகள் முன்னாள் வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன் போது, முன்னாள் வைத்திய 06



# யுத்தத்தில் அங்கவீனமுற்ற படையினர் அனைவருக்கும் நீதி வழங்கப்பட்டுள்ளது

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன

யுத்தத்தின் போது அங்கவீனமடைந்த அனைத்து இராணுவ வீரர்களுக்கும் கொடுப்பனவுகள், மருத்துவ புனர்வாழ்வு மற்றும் வாழ்நாள் முழுவதும் பராமரிப்பை வழங்குதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளின் ஊடாக, பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின் மூலம் அதிகபட்ச நீதியை வழங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் பாதுகாப்பு அமைச்சு நாட்டை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஸ்திரப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், மக்களுக்கு சிறந்த பாதுகாப்பான சூழலை உறுதி செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (30) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன(ஓய்வுபெற்ற) இதனைக் குறிப்பிட்டார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்வி வசதிகளின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதுடன், சிவில் மருத்துவ மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜெனரல் கமல் குணரத்ன குறிப்பிட்டதாவது:

"அனைவருக்கும் அமைதியான நாடு என்ற தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படும் பாதுகாப்பு அமைச்சு, கடந்த இரண்டு வருடங்களில் நாட்டை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஸ்திரப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மனிதக் கடத்தல் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் பாதுகாப்பு அமைச்சு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைக் கூற வேண்டும். அண்மைக் காலமாக அதிக கவனம் பெற்றுள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக போதைப்பொருள்களைக் கைப்பற்றி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்து கடற்படை தலைமையிலான முப்படையினரும் தலையிட்டு பெரும் பங்காற்றியுள்ளனர்.

அதன்படி 2023ஆம் ஆண்டு மாத்திரம் முப்படையினரின் நடவடிக்கைகளினால் சுமார் 560 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 3350 கிலோ கஞ்சா, 5220 கிலோ கேரள கஞ்சா, 60 கிலோ ஐஸ் போதைப்பொருள், சுமார் 151,000 போதை மாத்திரைகள்/கெப்சூல்கள் மற்றும் 6650 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

ஜூலை 2024 இற்குள், சுமார் 270 கிலோ ஹெராயின் கைப்பற்றப்பட்டுள்ளது, 3640 கிலோ கஞ்சா, 12,720 கிலோ கேரள கஞ்சா, 150 கிலோ ஐஸ் போதைப்பொருள், 43,600 போதை மாத்திரைகள்/ கெப்சூல்கள் மற்றும் 5000 லீட்டர் கசிப்பு ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இராணுவத்தினர் வழங்கிய பங்களிப்பை ஒருபோதும் மறக்க முடியாது என்பதையும் குறிப்பிட வேண்டும். அந்தப் போரில்

மரணம் அடைந்த போர்வீரர்களைத் தவிர, நாம் பாதுகாக்க வேண்டிய இன்னும் பலரும் இருக்கிறார்கள்.

போரில் காயமடைந்த 60,000 வீரர்களில் சுமார் 10,000 போர்வீரர்கள் படுக்கையில் அல்லது சக்கர நாற்காலிகளில் உள்ளனர். அவர்களுக்கு மருத்துவ மறுவாழ்வு வழங்கவும், வாழ்நாள் முழுவதும் சிகிச்சை அளிக்கும் வகையிலும் அத்திட்டிய, அனுராதபுரம், கம்புறுப்பிட்டிய மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் நிவாரண நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், நாட்டுக்காகப் போராடி மருத்துவக் காரணங்களால் ஓய்வு பெற்றிருக்கும் போது, 55 வயது நிறைவடையும் முன்னர் உயிரிழந்த இராணுவ வீரர்களில் தங்கி வாழ்வோர்களுக்கு, அவர்கள் உயிருடன் இருந்தபோது பெற்று வந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிலையான மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும். அதன்படி போரின் போது அங்கவீனமடைந்த அனைத்து இராணுவ வீரர்களுக்கும் நீதி கிடைத்துள்ளது என்பதையும் கூற வேண்டும்.

22 வருட சேவையை முடித்து ஓய்வு பெறும் 3000 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களுக்கு ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம், மீண்டும் தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளது. செங்கடலில் தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு 550 கடல்சார் பாதுகாவலர்களை அனுப்ப வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்கான ஆட்சேர்ப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும், சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் கல்வி வசதிகளின் தரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ மாணவர் சேர்ப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரைத்த இஸட் புள்ளி அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ளப்படும். திறமையான, நிபுணத்துவம் பெற்ற மற்றும் அங்கீகாரம் பெற்ற பேராசிரியர்கள் மாத்திரமே கற்பித்தலுக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரைத்த இஸட் புள்ளி அடிப்படையில் மாத்திரமே சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு மாணவர் அனுமதி**

மருத்துவ மாணவர்களின் பயிற்சிக்காக ஸ்தாபிக்கப்பட்ட கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் 1000 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளிகள் இலவச சிகிச்சை பெறுகின்றனர். அத்தோடு 2012 ஆம் ஆண்டு முதல் 286 வெளிநாட்டு மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மனிதக் கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணியானது இலங்கையில் மனிதக் கடத்தலுக்கு எதிராக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதுடன், அதற்கேற்ப, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இரண்டாம் நிலை அமுலாக்கத்தை இலங்கையினால் தொடர்ந்து 03 வருடங்களாக பேண முடிந்தது.

அத்துடன், கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அமைதி காக்கும் நடவடிக்கைகளில் மீளப் பங்கெடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது 301 இராணுவ வீரர்கள் லெபனான், தென் சூடான் மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு பகுதிகளில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக அதிக சர்ச்சைக்குள்ளான மியன்மாரில் சிக்கியிருக்கும் மக்களை மீட்பதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

உக்ரைன்_ரஷ்யா போருக்காக சென்றிருக்கும் முன்னாள் இராணுவ வீரர்கள் தொடர்பிலும் சிக்கல் எழுந்துள்ளது. இது தொடர்பாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து பணியாற்றுகிறோம். இதேவேளை, முன்னாள் படைவீரர்கள் சுற்றுலா விசாவிற்கு விண்ணப்பித்திருந்தால், பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவிக்குமாறு ரஷ்ய தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

மேலும், பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் கீழ் மண்சரிவு தேசிய மையமாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் செயல்படுகிறது. இதன் மூலம், தற்போது, இலங்கையில் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) நிதியுதவியுடன், 128 மண்சரிவு அபாயமுள்ள இடங்களை 'நிலைப்படுத்துதல் நுட்பங்கள் மூலம் மண்சரிவு அபாயத்தைக் மட்டுப்படுத்தல்' திட்டத்தின் மூலம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் உறுதிப்படுத்தி வருகிறது. மேலும், இதுவரை 46 மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் நிலைப்படுத்தல் பணிகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டின் சுகாதார திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, மாத்தறை வைத்தியசாலையில் பத்து மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு கடற்படையினரால் பத்து மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படுகிறது. அத்துடன், விமானப்படையின் ஆளணி

பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட மஹரகம அபெக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையின் ஆறு மாடிக் கட்டடத்தை எதிர்வரும் வாரத்தில் திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு நாடு முழுவதும் உள்ள பல்வேறு மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளை புனரமைப்பதற்காக முப்படையின் ஆளணியை வழங்கி வருவதுடன், தொடர்ந்தும் அதே சேவை வழங்கப்படவுள்ளது.

மேலும், பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதை மட்டுப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கை, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பது, நிவாரணம் வழங்குதல், அனர்த்த சூழ்நிலைகளுக்கு தயார்படுத்துதல், அனர்த்த தவிர்ப்புக்கு தேவையான நுட்பங்களை செயல்படுத்துதல், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுதல், பாதிக்கப்பட வேண்டிய பகுதிகளை கண்டறிந்து மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது போன்ற முக்கிய பணிகளை நாங்கள் செய்துள்ளோம்".

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மேஜர் ஜெனரல் சீ.ஏ விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ. எம். சீ. டபிள்யூ. அபேகோன் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# 'மிஹிர' பத்திரிகையை புதிய தோற்றத்தில் பிள்ளைகளின் கைகளில் வழங்குவோம்!



## லேக் ஹவுஸ் நிறுவன தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம்

குழந்தைகளின் வாழ்வில் உண்மையான இனிமையைக் கொண்டு வரும் 'மிஹிர' பத்திரிகை புதிய முறையில் குழந்தைகளின் கைகளில் சேர்க்கப்படும் என்று லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவித்தார்.

'மிஹிர' பத்திரிகையின் 60 ஆவது வருட நிறைவை முன்னிட்டு லேக்ஹவுஸ் நிறுவன வளாகத்தில் நேற்றுமுன்தினம் (30) நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு 'மிஹிர' என்ற புதிய இணையத் தளமும் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நவீனமயமாகி வரும் உலகில் 'மிஹிர' பத்திரிகையை நவீனமயமாக்குவது இன்றியமையாதது. அதற்கேற்ப 'மிஹிர' பத்திரிகை நவீன பத்திரிகையாக வெளியிடப்படும். மீண்டும் அச்சுப் பத்திரிகையாக குழந்தைகளின் கைகளில் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

60 ஆண்டுகளை நிறைவு செய்யும் 'மிஹிர' நாளிதழுக்கு முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜூலை 27, 1964 இல் 'மிஹிர' பத்திரிகை தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு நிறைவையொட்டி, குழந்தைகளின் கைகளில் மின் செய்தித்தாள் வழங்கப்படுகிறது. நாங்கள் அதை மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே வழங்குகிறோம். லால் லியனகே 'மிஹிர' பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக இருந்தார். அன்று முதல் இன்றைய ஆசிரியர் ரூபாந்தி புலத்சிங்கள வரை சிறப்பான ஆசிரியர் குழுவினர் 'மிஹிர' பத்திரிகைக்கு தங்களை அர்ப்பணித்து வருகிறார்கள். அந்த அர்ப்பணிப்பின் பலன்களை 'மிஹிர' பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. அந்த மாற்றத்துடன் நாமும் மாற வேண்டும். கொவிட் தொற்றுநோயால் உலகம் நிறைய மாறிவிட்டது. இந்த மாற்றத்துடன், நாம் அச்சு ஊடகங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும். கல்வியைப் பெறுவதற்கான ஒரு வழி, ஸூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகத்துடன் இணைப்பதாகும். இது கொவிட்டுக்கு முன்னும் உலகில் இருந்தது. கொவிட்டுக்கு பின்னரே எமக்குக் கிடைத்தது. உலகம் நம் கைகளுக்குள் வந்துவிட்டது, அதனால் ஸ்மார்ட்போன்களைப் பற்றி நாம் பேசுகிறோம்.







மாறும் உலகிற்கு ஏற்ப நாமும் மாற முடிவு செய்தோம். அதன்படி 'மிஹிர' பத்திரிகையை மின்னிதழ் பத்திரிகையாக பிரபலப்படுத்த முடிவு செய்தோம். 'மிஹிர' பத்திரிகை நிறுத்தப்படவில்லை. பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மீண்டும் தொடங்க முடிவு செய்கிறோம். தொழில்நுட்பம் எவ்வளவு முன்னேறியிருந்தாலும், வாசகர்களின் கைகளில் அச்சிடப்பட்ட செய்தித்தாளை வாசிக்கும் கலாசாரம் இன்னும் உள்ளது. இலத்திரனியல் ஊடகங்களுக்கு மேலதிகமாக உலகிற்கு ஏற்ற வகையில் 'மிஹிர'வை புதிய முறையில் குழந்தைகளிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

நாங்கள் டொலரைப் பற்றி பேசுகிறோம். முன்பெல்லாம் விமான நிலையத்தில் பிச்சைக்காரனுக்கு ஒரு டொலர் கொடுக்கப்பட்டபோது அவன் அதை ஏற்கவில்லை. ஆனால் இன்று நீங்கள் ஒரு டொலரைக் கொடுத்தால், அது மிகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பொருளாதார நெருக்கடியிலும் அதுதான் நடந்தது. ஒவ்வொரு நெருக்கடியிலும் புதிய விஷயங்கள் வருகின்றன. அதிக வீட்டுப்பாடங்களை கொடுக்கும் நாடு இலங்கை. அது குழந்தைகளுக்கு பிடிக்காது. அதை நான் அனுபவத்தில் அறிவேன். பாடசாலைகளில் கொடுக்கப்படும் வீட்டுப்பாடங்களை குழந்தைகளால் செய்ய முடியாது. அதனால் வீட்டுப்பாடம் செய்வது பெற்றோர்தான்.

மிஹிர அறிவை இலக்காகக் கொண்டது. இது பரீட்சையை இலக்காக கொண்டதல்ல. பாடசாலை பரீட்சைகளை இலக்காகக் கொள்வதா என்பது தொடர்பில் பணிப்பாளர் சபையினரிடையே கலந்துரையாடல் இடம்பெற்று வருவதுடன், பரீட்சைகள் இலக்கு வைக்கப்படாவிடின் பிள்ளைகள் மத்தியில் பிரபலமாகுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. உண்மையான மகிழ்ச்சியை சிறுவர்களிடையே உருவாக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்".

இவ்வாறு லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்த வித்தியாலய அதிபர் லால் திஸாநாயக்க உரையாற்றுகையில், மிஹிர பத்திரிகையின் வாசகர்களாக நாங்கள் அதை விரும்புகிறோம், ஏனென்றால் குழந்தைகளுக்கு பத்திரிகையின தாய் வீடு வழங்கும் இந்தப் பத்திரிகையால் குழந்தைகள் நிறைய அறிவைப் பெறுகிறார்கள். இந்த செய்தித்தாளில் குழந்தைகள் நிறைய தகவல்களைப் பெறுகிறார்கள் என்று, எங்களுக்குத் தெரியும்.

குதிரைக்கு நீரைப் பருக்க முடியாது. ஏனென்றால் குதிரைக்கு நஞ்சற்ற நீரை அருந்தத் தெரியும். அவ்வாறே குழந்தைகளுக்கு நல்லதைப் பெற 'மிஹிர' விழிப்புணர்வை விரிவுபடுத்தும். 'மிஹிர' நாளிதழில் இருந்து எது சரி? எது தவறு? என்று முடிவு செய்யலாம். அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு ஒழுக்கம் மனிதனிடம் இருக்க வேண்டும். பொறுமை, இரக்கம், கருணை ஆகிய பண்புகளை குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தக் குணங்கள் இவ்வுலகில் வாங்க முடியாதவை. பௌத்த நாடு என்ற வகையில் இந்தப் பண்புகளை நாம் எமது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு 'மிஹிர' பத்திரிகை சிறந்த இடம். உன்னத மனிதப் பண்புகளை குழந்தைகளிடம் புகட்டுவதன் மூலம் நாட்டை மேம்படுத்த முடியும். இந்த நற்பண்புகளை குழந்தைகளிடம் வளர்க்க 'மிஹிர' பெரும் முயற்சிகளை மேற்கொள்கிறது. அந்த வகையில் 'மிஹிர' ஆசிரியர் குழுவிற்கு எனது நன்றியைத் கொள்கிறேன்" என்றார்.

பிரமுதித விக்கிரமசிங்க (கொழும்பு தேர்ஸ்டன் கல்லூர அதிபர்) உரையாற்றுகையில், '"60 ஆவது பிறந்தநாளை கொண்டாடும் 'மிஹிர' பத்திரிகை அறிவை வளர்க்க எனக்கு பெரும் உதவியாக இருந்தது. சிறுவயதில் 'மிஹிர'விடம் இருந்து அறிவு கடன் வாங்கினோம். என்ன காரணத்தினாலோ 'மிஹிர' பத்திரிகையை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மட்டுமே வெளியிட முடிவு செய்துள்ளார்கள். 'மிஹிர' பத்திரிகையை மீண்டும் அச்சடித்து மக்களுக்கு கிடைக்கச் செய்யுமாறு நிறுவனத்திடம் கேட்டுக் கொள்கிறேன்.

கொழும்பு ஆனந்தா பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி கங்கா குமுதினி பேசுகையில், "எனக்கு கடந்த காலத்தில் மிஹிரவின் ஞாபகம் உள்ளது. அப்போது அச்சிடப்பட்ட பத்திரிகையாக வந்தது. அந்த பத்திரிகைகளை என் மகனுக்காக சேமித்து வைத்தேன். இதன் மூலம் அறிவியல், சுற்றுச்சூழல் அறிவு மற்றும் பல விஷயங்களை பெறுகிறோம். டிஜிட்டல் மீடியா மூலம் சலனப் படங்கள் போன்ற ஆக்கபூர்வமான விஷயங்கள் கொண்டுவரப்படுகின்றன. இந்த பத்திரிகை குழந்தைகளின் அறிவை மட்டுமல்ல, அவர்களின் மனித பண்புகளையும் வளர்க்கட்டும்" என்றார்.

சம்பத் நவரத்ன (சர்வதேச பாடசாலை அதிபர்) பேசுகையில், "கொழும்பில் உள்ள முன்னணி ஊடக நிறுவனமொன்றில் இணைந்து 'மிஹிர' பத்திரிகையின் ஆங்கில ஆசிரியராக மாணவர்களிடையே என்னால் செல்ல முடிந்தது. அதற்காக 'மிஹிர' பத்திரிகைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிஹிர பத்திரிகையை மீண்டும் அச்சிட்டால் குழந்தைகள் மத்தியில் அதனை எம்மால் கொண்டு செல்ல முடியும். இது மாணவர்களிடையே முத்திரை பதித்த பத்திரிகை" என்றார்.

இவ்விழாவை வண்ணமயமாக்கும் வகையில் 'தங்க கரனா ஹா பென்சாத்மன் வகேலு' பாடலை ஹம்பாந்தோட்டை தேரபுத்த தேசிய பாடசாலையின் ஜி. டபிள்யூ. சினேத்மா பாடினார்.

மிஹிர சிறுவர் சங்கத்தின் குழந்தைகளின் சில ஆக்கங்களும் இங்கு காட்சிப் படுத்தப்பட்டன. சிறுவர் தொலைக்காட்சி அறிவிப்பாளர்களான ஹுனுமுல்ல சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர தேசியக் கல்லூரியைச் சேர்ந்த ஒஷான் வகீஷ மற்றும் வெயாங்கொட பண்டாரநாயக்க மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ரொஹான்சா நிசலனியும் நிகழ்வை வழிநடத்தினார்கள்.

லேக் ஹவுஸ் ஆசிரியபீடப் பணிப்பாளர் சிசிர பரண தந்திரி, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, பொதுமுகாமையாளர் சுமித் கொத்தலாவல தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**சந்தியா கருணாரத்ன...**
தமிழில்: வீ.ஆர்.வயலட்

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN தினகரன்

2024 ஓகஸ்ட் 1 வியாழக்கிழமை

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் - | 04.44 |
| லுஹர் - | 12.18 |
| அஸர் - | 03.39 |
| மஃரிப் - | 06.31 |
| இஷா - | 07.44 |

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆடி 16

ராகுகாலம் : பகல் : 01.33 - 3.30வரை
சுபநேரம் : காலை : 07.33 - 09.03வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# சாரணர் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் ஆதரவு

## 75,000 இருந்து 150,000 வரை அதிகரிக்கப்படும்

சாரணர் இயக்கம், கெடட் படைப் பிரிவு, இளைஞர் படையணி உள்ளிட்ட இளைஞர் அமைப்புகளை சகல வழிகளிலும் பலப்படுத்தி, நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் பரந்த பங்களிப்பைப் பெறுவதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி எதிர்கால பயணத்திற்கு பரந்த பங்களிப்பைப் பெறுவது தனது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (31) இடம்பெற்ற இலங்கை பெண் சாரணர் இயக்க உறுப்பினர்களுக்கு 'ஜனாதிபதி பதக்கம் ' வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

சாரணர் இயக்க அங்கத்தவர் தொகையை 75,000 இல் இருந்து 150,000 வரை அதிகரிக்கத் தேவையான ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சாரணர் இயக்கம், கெடெட் படை, இளைஞர் படையணி உள்ளிட்ட இளைஞர் அமைப்புக்கள் ஊடாகவும் போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு பெருமளவில் பங்களிக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

2000 இளம் பெண் சாரணர்களுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைவி சாந்தி வில்சன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு விசேட நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க:

"சாரணர் இயக்கம் தொடர்பில் எனக்கு நல்ல புரிதல் உள்ளது. எனது குடும்பத்தைச் சேர்ந்த பலர் இந்த அமைப்பில் இணைந்து செயற்பட்டுள்ளனர். சாரணர் இயக்கத்தை மேலும் முன்னேற்ற வேண்டும். சாரணர் இயக்கத்திற்குத் தேவையான கட்டடமொன்றை வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை 06



## நாட்டின் பொருளாதார பாதுகாப்புக்கான

# பஞ்ச ஆயுதங்களுடன் களமிறங்கும் ஒரே வேட்பாளர் ரணில் மட்டுமே

## அதனாலேயே SLPP பலர் அவரை ஆதரிக்கிறோம்

பொருளாதாரப் பாதுகாப்புக்கான பஞ்ச ஆயுதங்களுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. இதனாலேயே மொட்டு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான அமைச்சர்களும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரது வெற்றியை உறுதி செய்ய அவருக்கு ஆதரவளித்து வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.



அண்மைய காலமாக ஒவ்வொரு அரசாங்கமும் பணத்தை அச்சிட்டதாகவும், அதன் விளைவாக வரி வீதங்களில் அசாதாரண அதிகரிப்பு ஏற்பட்டு வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார். இதனை தடுத்து நிறுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி மூலம் பண மதிப்பு நீக்கத்தை தடை செய்யும் வகையில், புதிய சட்டமூலமொன்றை கொண்டு வந்தவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக பாடுபடுவேன் என ஹோமாகம மக்களுக்கு அறிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபைக் கூட்டத்தின் பின்னர், நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹோமாகம பல்பொருள் அங்காடியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது,

நாட்டில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் விரும்பியவாறு மொத்தமாக கடன்களை பெற்றுக்கொண்டன. அதிக வட்டிக்கு சந்தைக்குச் சென்று இறையாண்மைப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் கடன் வாங்கப்பட்டது. இனியும் அவ்வாறு செய்ய முடியாதவாறு கடன் கட்டுப்பாடு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பொய்யான அரசியல் வாக்குறுதிகளுடன் பட்ஜெட்டில் நிதியை ஒதுக்க முடியாதவாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி முகாமைத்துவ சட்டமூலமொன்றை முன்வைத்தார். அதன்படி வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு பாராளுமன்றத்தில் தனியான வரவு செலவுத் திட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரப் போக்கை மாற்றும் வகையில், அனைத்து அரசியல் கட்சிகளின் ஒப்புதலுடன் கடந்த வாரம் பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

கடுமையான ஊழல் எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது, இச் சட்டம் அரசப்பிரிவு அல்லது அரசியல்வாதிகள் அல்லது அதிகாரிகள் அல்லது மற்றவர்கள் திருட்டு, மோசடி மற்றும் ஊழல் செய்வதைத் தடுக்கிறது.

இந்த பொருளாதார பஞ்சாயுதத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு வரப்போகும் ஒரே வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# SLPP ஜனாதிபதி வேட்பாளர் யார்? அறிவிப்பு சில நாட்கள் தாமதமாகும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது நேற்று அறிவிக்கப்படவிருந்த போதும் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையால் மேலும் சில நாட்கள் தாமதமாகியே அறிவிக்கப்படவுள்ளது.

கட்சியிலிருந்து விலகிச் செல்லும் மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்குப் பதிலாக புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் வகையில், இதன்போது பல தீர்மானங்கள் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நீதி அமைச்சின் வர்த்தக நீதிமன்ற இணையதளம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்ட அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அனுசரனை வழங்கியுள்ளது. இதற்கான அங்குரார்ப்பன நிகழ்வு நீதி அமைச்சின் செயலாளர், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்ட மாஅதிபர் பரிந்த ரணசிங்க , ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி ஜோன் கெயிசஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அசுசா குப்டா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். **( படம் – தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்)**

# கொழும்பு மாநகர எல்லைக்குள் வாகனம் நிறுத்தும் விசேட முறை

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து திணைக்கள பிரதி பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவிக்கையில், வீதிகளில் வாகன தரிப்பிடத்தை நிர்வகிப்பதற்கு ஒப்பந்ததாரர் மற்றும் நிர்வாகியை நியமிக்கும் தற்போதைய முறைக்கு பதிலாக, ஒரு வலயத்துக்கு ஒரு ஒப்பந்ததாரர் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இந்த முறையை சுமார் 03 மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாவும் அவர் கூறினார்.

ஒதுக்கப்பட்ட வலயங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகளை மேற்கொள்ளும் போது, சம்பந்தப்பட்ட வலயங்களில் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு அல்லது மூன்று இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதி சாரதிகளுக்கு கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகன நிறுத்துமிடங்களில் பல்வேறு தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் போக்குவரத்து திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மேலும் கூறினார்

# வங்குரோத்திலிருந்து நாட்டை காப்பாற்றியவர் ஜனாதிபதி ரணில்

## கெஸ்பேவ ஐ.தே.க பிரதேச அமைப்பாளர் ரணில் வில்லத்தரகே

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்லாமல் நாட்டை காப்பாற்றவும் தொழில் முயற்சியாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்கவும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாலேயே முடிந்துள்ளதாக, ஐக்கிய தேசிய கட்சியின் கெஸ்பேவ பிரதேச அமைப்பாளர் ரணில் வில்லத்தரகே தெரிவித்தார்.

கெஸ்பேவ தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவினருடனான சந்திப்பின்போது (29) ரணில் வில்லத்தரகே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ரணில் வில்லத்தரகே,



"பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட்டிருக்காவிடில், தொழில்முனைவோராகிய நாம் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டிருப்போம். அது நடந்திருந்தால், தனியார் துறை பாரிய சரிவைச் சந்தித்திருக்கும். சுமார் 06 மில்லியன் தனியார் துறை ஊழியர்கள் பாதிக்கப்படும் வாய்ப்பைத் தடுத்ததன் மூலம் நெருக்கடியை நிர்வகிக்க முடிந்தமையானது, நாடு பெற்ற பெரும் அதிர்ஷ்டமாகும். வீழ்ச்சியடைந்த 06

# கேரளா, மண்சரிவு: உயிரிழப்பு 162 ஆற்றில் மிதந்த 60 உடல்கள் மீட்பு

## மீண்டும் மண்சரிவு ஏற்படலாமெனவும் எச்சரிக்கை

கேரளா, வயநாடு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட பயங்கர மண்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 162 ஆக அதிகரித்துள்ளது. அங்குள்ள 03 கிராமங்கள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டதால், சிக்கியுள்ள 400 குடும்பத்தினரை மீட்பதற்காக இராணுவம், விமானப் படை, கடற்படை வீரர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த 60பேரின்சடலங்கள், பல கிலோமீட்டர் தூரம் சாலியாற்றில் மிதந்து வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



மலப்புரத்திலுள்ள சாலியாற்றில் மிதந்து வந்த 60 பேரின் சடலங்களையும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் மீட்டனர். 26 பேரின் சடலங்கள் முழுமையாக மீட்கப்பட்டன.

எஞ்சியவர்களின் சடலங்கள் தலை, கை, கால்கள் துண்டாகி சிதைந்த நிலையில் காணப்பட்டன. மண்சரிவில் புதைந்த உடல்களை கண்டறிய 03 மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன. மண்சரிவு ஏற்பட்டு தனித் தீவுகளான இடங்களில் தற்காலிக பாலம் அமைக்கப்பட்டு மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் வயநாடு நிலச்சரிவில் சிக்கியவர்களில் 1,000 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர்.

கேரளாவில் அடுத்த 02 நாட்களுக்கு மழை தொடருமென வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. மழை தொடரும் பட்சத்தில் வயநாட்டில் மீண்டும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# ரணில் ஜனாதிபதியாவதை தவிர வேறு மாற்று வழிகள் கிடையாது

## மஹிந்தவுக்கு அமைச்சர் பிரசன்ன கடிதம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்தாலன்றி, பொதுஜன பெரமுன கட்சியினரை பாதுகாப்பதற்கான வேறு மாற்று வழிகள் எதுவும் கிடையாதென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



அதனைத் தெளிவுபடுத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பொதுஜன பெரமுன கட்சி மேற்கொண்டுள்ள தீர்மானத்தையடுத்து, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு இது தொடர்பில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதை விட வேறு மாற்று வழி தமக்குத் தெரியவில்லை என்றும் அமைச்சர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். 06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 25



### குறள் தரும் சிந்தனை

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

நெருப்பு சுட்ட புண்கூட ஆறி விடும்;
ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய
சொற்கள் விளைத்த துன்பம் ஆறவே ஆறாது.

## பொருளாதார திட்டங்களினால் ஏற்பட்டுள்ள பிரதிபலன்கள்

இலங்கையின் பொருளாதாரம் சாதகமான முறையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதனை பரவலாக அவதானிக்க முடிகிறது.

உலகில் பல நாடுகள் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன. அத்தகைய நாடுகள் அந்த நிலையில் இருந்து மீட்சி பெறுவதற்கு பல வருட காலம் சென்றுள்ளன. இது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் அவ்வாறான பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான இலங்கை குறுகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெற்றதோடு வங்குரோத்து நிலையில் இருந்தும் விடுதலையாகியுள்ளது. இதனை சர்வதேச நாணயம் உள்ளிட்ட உதவி வழங்கும் நிறுவனங்களும் கூட உறுதிப்படுத்தியுள்ளன.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இவ்வாறு குறுகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெறுவது என்பது இலகுவான காரியமல்ல. அதற்கு ஏற்ப தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டும். தூரநோக்குடன் கூடிய பொருளாதார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தகைய தலைமைத்துவத்தை வழங்கி நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி பொருளாதார மேம்பாட்டு திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

அதாவது பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாரம்பரிய அரசியலுக்கு அப்பால் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களைத் தொடங்கினார். அவ்வேலைத்திட்டங்கள் அனைத்தும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பாலானவை. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டவை. மீண்டுமொரு தடவை நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட இடமளிக்காதவை.

அதன் பிரதிபலனாகவே பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான ஏனைய நாடுகளுக்கு விதிவிலக்காகவும் முன்னுதாரணமாகவும் குறுகிய காலப்பகுதிக்குள் இலங்கையினால் பொருளாதார மீட்சியையும் வங்குரோத்து நிலையில் இருந்து விடுதலையும் அடைந்து கொள்ள முடிந்துள்ளது. இதனை சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களும் உதவி வழங்கும் நாடுகளும் அங்கீகாரம் அளித்துள்ளதோடு, ஒத்துழைப்புக்களையும் நல்கியுள்ளன. நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதன் பிரதிபலனே இவை.

அந்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார செயற்பாட்டாளர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்காக சுங்கத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய, "இவ்வருடத்தின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை முதல் ஐந்து மாதங்களில் 63.8 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இப்பற்றாக்குறை 1014 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அது 2024 ஆம் ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதி வரையான முதல் ஐந்து மாத காலப்பகுதியில் 336 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. முறையான பொருளாதார வேலைத்திட்டங்களின் ஊடாக நாடு முன்னோக்கி நகர்வதன் வெளிப்பாடே இவை" என்றுள்ளார்.

அது முற்றிலும் உண்மையான கூற்றாகும். பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியிருந்த நாட்டை பொறுப்பெடுத்ததும் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பித்தார். அதன் பிரதிபலன்களில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் அடங்கும்.

அதேநேரம் நாட்டின் முக்கிய வருமான ஆதாரங்களில் ஒன்றாக விளங்கும் வாகனங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கை சுங்கம் பொருளாதாரத்திற்கு சிறப்பான பங்களிப்பை நல்கி வருகிறது. அந்த வகையில் 2024 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்திற்கான வருவாய் இலக்கு 1537 பில்லியன் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் 708 பில்லியன் ரூபாவை ஏற்கனவே சுங்கம் ஈட்டியுள்ளது. அதாவது வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள சூழலில் சுங்கம் இவ்வாறு வெற்றிகரமாக வருவாய் ஈட்டியுள்ளது.

இதேபோன்று நாட்டின் ஏனைய துறைகளும் பொருளாதார ரீதியில் முன்னேற்றங்களை வெளிப்படுத்திய வண்ணமுள்ளன. அதற்கு திட்டமிட்ட அடிப்படையில் தூர நோக்குடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்களே காரணமாக அமைந்துள்ளன.

அதன் பயனாகவே வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உள்ளிட்ட பொருளாதார துறைகளில் குறுகிய காலப்பகுதியில் முன்னேற்றங்கள் பதிவாகும் முன்னேற்றகர நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இந்த பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவே மக்களின் விருப்பமாகும். அதற்கேற்ப செயற்படுவதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டில் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பவர் ஜனாதிபதி ரணில்



## தமிழ் மக்கள் ஒன்றிணைந்து உழைப்பது அவசியம்

மறைந்த முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலில் அரசியலுக்குள் நுழைந்து 1999 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்தார். 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற வைப்பதற்கு ஐ.தே.கவுடன் இணைந்து பணியாற்றினார்.

2005 ஆம் ஆண்டிலும் அவருக்குப் பலமாக ஆதரவு வழங்கியதோடு, பல்வேறு வேலைத் திட்டங்களை வடக்கில் முன்னெடுத்தார்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன், 2010 முதல் இன்றுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக செயற்படுவதோடு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறுதியாக செயற்படுகிறார். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் மறைந்த அமைச்சர் அமரர் தி. மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சராகவும், திருமதி விஜயகலா மகேஸ்வரன் பெண்கள் விவகார பிரதி அமைச்சராகவும், சிறுவர் விவகாரங்களுக்கான அமைச்சராகவும், பின்னர் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றினார்.

அமரர் மகேஸ்வரன், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்டங்களில் மூன்று தடவை பாராளுமன்ற உறுப்பினராகவும், திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாவட்டத்தில் இரண்டு தடவை பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினர்.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் திருமதி மகேஸ்வரன் ஆகியோர் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை ஆரம்பித்து, மக்களுக்கு சேவையினை வழங்கி, மக்களின் சிக்கல்களை உலகிற்கு வெளிப்படுத்தினர். அமரர் மகேஸ்வரன் தனது உயிரை மக்களுக்காக அர்ப்பணித்தார்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன் தனது அமைச்சுப் பதவியை மக்களுக்காகத் துறந்தார். ரணில் விக்கிரமசிங்க எப்போதும் அவர்களுக்கு உறுதியாக நின்று, அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் திறமையை மதித்தார்.

2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாகத் தோல்வியடைந்து, ரணில் விக்ரமசிங்க உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் பாராளுமன்ற ஆசனங்களை இழந்தனர். இந்தப் பின்னடைவுக்கு பிறகும், அவர்கள் தயக்கம் காட்டாமல் வேறு கட்சிக்கு மாறவில்லை. மக்களின் தீர்மானத்தை மதித்து இந்த நாட்டுக்கு அவர்கள் தேவைப்படும்போது மட்டுமே முன்வந்தனர்.

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்காக நாம் காத்திருக்கும் நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன் நமது நாடு சந்தித்த பொருளாதாரச் சிக்கல்களை மறக்கக் கூடாது. இருண்ட யுகத்தில் இருந்த இலங்கையினை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என நினைத்து பிரதமர் பதவியை பொறுப்பேற்று பொருளாதார நிலைத்தன்மையை கொண்டு வந்தார்.

அவரது தலைமையிலேயே சிறுபான்மையினருக்கு எப்போதும் வாய்ப்புகள் வழங்கப்பட்டதோடு, நீண்ட காலமாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் சர்வதேச நாட்டு கண்காணிப்புடன் இடம்பெற்றதோடு, அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்பட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், பொருளாதாரத்தை நிலைநாட்டி வந்தபோதும், பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வேண்டுகோளின் பேரில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு திட்டங்களுக்கு 196 மில்லியன் ரூபா நிதியினை அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கினார். இது, கடந்த இரண்டு ஆண்டுகளில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் கிடைத்த நிதி ஒதுக்கீட்டினை விட அதிகம்.

இது மக்களின் நலனில் உண்மையான சேவை செய்யும் திருமதி மகேஸ்வரனின் திறமையை அவர் எவ்வளவுகாலமாக நம்புகிறார் என்பதற்கான அடையாளமாகும். தமிழ் மக்களுக்கு இந்நேரத்தில் தேவையான உரிமைகளை வழங்கக் கூடிய இனவாதம் இல்லாத ஒரே ஒரு தலைவர் அவர் மாத்திரமே. ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்குரிய வெற்றிகரமான பிரசாரத்திற்கு தமிழ் மக்கள் உறுதியுடன் இணைவது அவசியமாகும். ஜனாதிபதி தலைமையிலான சிறப்பான எதிர்காலத்தை நிச்சயமாக்க ஒன்றுபட்டு உழைப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

**எம். வரதராஜன்...**
யாழ்ப்பாணம்

# தீகவாப்பியில் நல்லிணக்கப் பொறிமுறை இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வு



உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வுகள் அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் தலைமையில் உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி) ஆலோசனையில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. மஜீட் வழிகாட்டலில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்எம். றிஸான் நெறிப்படுத்தலில் தீகவாப்பி ரஜமஹாவிகாரையில் நேற்றுமுன்தினம் இச்செயலமர்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, டொக்டர் யுவி தங்கராசா (Head of Pol icy), இஸற். ஏ.எப். வஸ்னியா (Senio r Legal Advisor), கொத்தலாவல (Coord inator of President Secretariat) மற்று ம் ரஜமஹா பரிவர சைத்திய விகாராதிபதிகள், அட்டாளைச்சேனை ஜம்மியதுல் உலமா செயலாளர், திராய்க்கேனி ஆலய குரு, அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாயல் செயலாளர், தீகவாவி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச பொதுமக்கள் என பலரும் பங்கேற்றனர்.

இதன் போது பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள், அனுபவங்கள், உண்மை மற்றும் நல்லிணக்க செயன்முறை தொடர்பாக பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர்.

**எம்.எப். நவாஸ்...**
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட்-2024; இலங்கைக்கு 4 வெண்கலப் பதக்கங்கள்

கடந்த ஜூலை மாதம் 21 முதல் 30 ஆம் திகதி வரை சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற 56 ஆவது சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட்_ 2024 இல் இலங்கை 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளதில் பெருமை கொள்கிறது.

90 நாடுகளில் இருந்து 333 திறமையான இளைஞர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். போட்டிகளில் கலந்து கொண்ட 4 இலங்கை இளம் மாணவர்களும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

பஹன்மா லெனோரா (சங்கமித்த பாலிகா வித்தியாலயம், காலி), பி.ஆர்.எஸ்.டி.என்.பலிஹவடன (கொழும்பு றோயல் கல்லூரி), வஜ்ர நெத் விஜேசூரிய (ஆனந்த கல்லூரி, கொழும்பு) ஆகியோர் பங்கேற்றனர். ஸ்ரீமாதுரி சிந்தனைச்செல்வன் (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) என்பவரும் பங்கேற்றார். இவர்கள் அனைவரும் அண்மையில் வெ ளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் உயர் தகைமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் 56 ஆவது சர்வதேச வேதியியல் ஒலிம்பியாட்_ 2024 இல் கலந்து கொண்ட இளம் பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களின் மேற்பார்வையாளர்களை கௌரவிக்கும் வகையில் ரியாத்தில் உள்ள தூதரக வளாகத்தில் மதிய போசன விருந்து அளித்தது.

# தோண்டத் தோண்ட சடலங்கள்; வயநாட்டில் பலநூறு பேர் பலி!

இந்தியாவின் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்று 180ஆக அதிகரித்துள்ளது. தோண்டத் தோண்ட சடலங்கள் கிடைப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணியில் தேசிய, மாநில பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு துறையினர், விமானப் படையினர் உள்ளிட்டோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் திங்கள் இரவு வயநாடு மாவட்டம் மேப்பாடியை அடுத்த சூரல்மலை பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவு ஏற்பட்டு இரண்டு மணி நேரத்தில், அதாவது அதிகாலை 4.30 மணியளவில் மேம்பாடிக்கு அருகில் உள்ள பகுதிகளில் மற்றொரு நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மேப்பாடி, சூரல்மலை, முண்டக்கை, வைத்திரி, வெள்ளேரிமலை, பொத்துகலு உள்ளிட்ட கிராமங்கள் கடுமையாகப் பதிக்கப்பட்டன.

மக்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது இந்த நிலச்சரிவு ஏற்பட்டதால், என்ன நடக்கிறது என்பதை உணர்வதற்கு கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. மேற்குறிப்பிட்ட பகுதியில் இருந்த



வீடுகள் அனைத்தும் மண்ணால் மூடப்பட்டிருக்கின்றன. மீட்புப் படையினர் முழு வீச்சில் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

நேற்றுவரை 250 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். நேற்றுவரை சுமார் 180 சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. பலத்த மழை தொடர்ந்து வருவதால் வீதிகள், பாலங்கள் அடித்து செல்லப்பட்டிருக்கின்றன. இதனால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் 3 கிராமங்களை சேர்ந்த 1000 பேர் மண்ணுக்கடியில் புதைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அதேபோல 100க்கும் மேற்பட்டோரின் நிலை என்னவென்று தெரியவில்லை.

எறுவழிஞ்சி என்னும் ஒரு ஆறு தன் வழமையான பாதையை பெரும் நிலச்சரிவால் தொலைத்து ஒரு கிராமத்துக்கு நடுவே இப்போது பெருவெள்ளமாய் பாய்ந்து ஓடுகிறது. அந்தக் கிராமமும் கிராமத்தில் இருந்த நூற்றுக்கணக்கான மக்களும் என்னதான் ஆனார்கள் என்பது தெரியாதுள்ளது. ஒட்டுமொத்த கிராமங்களே நிலத்தில் புதையுண்டு போயுள்ளன. அப்பகுதியில் மரணஓலம் கேட்கின்றது.

# நகர்வலம்



# நிதி ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தேர்தல் சட்டத்திற்கு முரணாகாது

## எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தல் சட்டம் மீறப்படாது அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தேர்தல் சட்டங்களுக்கு தடையாக அமையாது என்றும் அந்தத் திட்டங்கள் மூலம் எந்த சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி வேட்பாளர் ஊக்குவிக்கப்பட மாட்டார் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அந்த வகையில் இந்த வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கான அபிவிருத்தித் திட்டங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ள அமைச்சர், அவ்வாறு செயற்படாவிட்டால் அது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கிணங்க அவ்வாறு நிறைவடைந்துள்ள அபிவிருத்தி திட்டங்கள் மக்களுக்கு கையளிக்கப்படும் என தெரிவித்த அமைச்சர், இதன்போது எந்த விதத்திலும் தேர்தல் சட்டங்கள் மீறப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்த அமைச்சர், ஹங்கேரிய நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் கண்டி கெட்டம்பே மேம்பாலத்தை மேற்பார்வை செய்வதற்கு ஹங்கேரியத் தூதுவர் தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அமைச்சர் இதன் போது மேலும் தெரிவித்துள்ளார்.

# கர்நாடக துணை முதலமைச்சருடன் பிரதி உயர்ஸ்தானிகர் சந்திப்பு



இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன், கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமாரை அண்மையில் பெங்களூருவில் உள்ள விதான சவுதாவில் சந்தித்தார். இரு அண்டை நாடுகளுக்கும் இடையே பரஸ்பர வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு வாய்ப்புகள் பற்றிய கருத்துகளை இருவரும் பகிர்ந்து கொண்டனர். இலங்கையில் சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்ப முதலீட்டு வாய்ப்புளைச் சுட்டிக்காட்டிய கலாநிதி வெங்கடேஷ்வரன், கர்நாடக அரசு இந்தத் துறைகளில் அதிக முதலீடு செய்யவேண்டும் என்றும் அதற்காக கர்நாடக துணை முதலமைச்சர் சிவகுமார் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்றும் தனிப்பட்ட அழைப்பை பிரதி உயர்ஸ்தானிகர் இதன்போது விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கணவன் மனைவி பயணித்த மோ. சைக்கிள் விபத்து; மனைவி பலி

## நொச்சியாகம நகரில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கணவன் மனைவி பயணம் செய்த மோட்டார் சைக்கிள் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்று கொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளானத்தில் மனைவி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவம் நொச்சியாகம நகரில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்றுள்ளது.

இராஜாங்கனை யாய 15, பஹலமாராகஹவெவ பகுதியைச் சேர்ந்த எம்.பீ.தினேக்ஷா தில்ஹானி (34) வயதுடைய பெண் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்துள்ள பெண் அவரது கணவருடன் இராஜாங்கனையிலிருந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்று கொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளது.



மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் சென்ற சொகுசு பஸ்ஸை முந்திச் செல்வதற்கு சென்ற போது மோட்டார் சைக்கிள் பக்க கண்ணாடி மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# புதிய கடேட் அதிகாரிகள் நியமனம்; விமானப்படை தளபதி பங்கேற்பு

வானின் பாதுகாவலர்கள் என்றழைப்படும் இலங்கை விமானப்படையானது நாட்டின் பாதுகாப்பை எப்போதும் உறுதிசெய்துகொண்டு இருக்கிறது. அந்தவகையில் புதிய கடேட் அதிகாரிகள் விமானப்படையினுள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இதன்போது இல. 78 மாணவர் அதிகாரி பாடநெறி (மருத்துவம், சட்டம், சிவில் பொறியியல், தகவல் தொழில்நுட்ப பொறியியல், ஏரோநாட்டிகல் மற்றும் பொது பொறியியல்) ஆகிய துறைகளிலும் மற்றும் இல. 35 கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கடேட் அதிகாரி பாடநெறி (மருத்துவம்) துறையிலும் தெரிவான கடேட் அதிகாரிகள் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் புதிய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு தியத்தலாவ விமானப்படை போர் பயிற்சி பாடசாலையில் கடந்த 29ம் திகதி இடம்பெற்றது.



இந்த அதிகாரிகள் நியமன அணிவகுப்புக்கு பொறுப்பதிகாரியாக தியத்தலாவ போர் பயிற்சி பாடசாலையின் கட்டளை அதிகாரியான விங் கமாண்டர் கனிஷ்க ஜயசேகர தலைமைதாங்கினார். இதன் போது இல.78 மாணவர் அதிகாரி பாடநெறியில் 06 ஆண் அதிகாரிகள் மற்றும் 10 பெண் அதிகாரிகளும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இல.35 பாடநெறியில் 12 அதிகாரிகள் உட்பட 28 அதிகாரிகள் கடேட் அதிகாரிகளாக நியமனம்பெற்றனர். இந்த நிகழ்வில் விமானப்படை பதவிநிலை பிரதானி, பிரதி பதவிநிலை பிரதானி மற்றும் பணிப்பாளர்கள், தியத்தலாவ `விமானப்படை தளத்தின் கட்டளை அதிகாரி, மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அங்கத்தவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புத்தளத்தில் பிரபல காரிகளினால் அல் – குர்ஆன் ஓதும் நிகழ்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் பெரிய பள்ளிவாசலில் முதன்முறையாக பிரபல காரிகளினால் அல்குர்ஆனை ஓதிக்காண்பிக்கும் நிகழ்வு எதிர்வரும் 03ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 04 மணியிலிருந்து இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக பங்களாதேஷ் அல்காரி, அல் ஹாபிழ் கம்றுல் எல்லோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் முக்கிய நிகழ்வுகளாக பெரிய பள்ளிவாசலில் இயங்கி வந்த மத்ரஸதுல் ரௌலத்தில் ஹாபிழீன் மத்ரஸாவை மீண்டும் ஆரம்பித்தல், கிராஅத் அரங்கேற்றம் மற்றும் சான்றிதழ் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுரம் மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டக்கல்லூரி மாணவனுமான நிஜாப்தீன் ஹபீப் முஹம்மத் கடந்த (30) அகில இலங்கை சமாதான நீதவானாக கெகிராவை நீதவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எஸ்.பண்டார முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், கனேவல்பொல முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலன்னறுவை முஸ்லிம் தேசியப் பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவரும், கனேவல்பொலயை சேர்ந்த சேகுமதார் நிஜாப்தீன் (ஜே.பி), அப்துல் காதர் பரீதா (ஆசிரியை) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

# க.பொ.த உ/த மாணவர்களுக்கான இலவச விழிப்புணர்வு வழிகாட்டல்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளிலிருந்து இம்முறை க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான க.பொ.த உயர் தரத்தில் கற்கை நெறிகளை எவ்வாறு தெரிவுசெய்வது தொடர்பான இலவச விழிப்புணர்வு வழிகாட்டல் செயலமர்வு ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.



ஹம்பாந்தோட்டை ஸ்மார்ட் சிட்டி குழுவோடு இணைந்து மாத்தறை ருஹூனு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் குழுவினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் மாத்தறை ருஹூனு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களே வளவாளர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இந்தநிகழ்வில் அதிதிகளாக ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர்எம். எம். ரிஸான், பிரதி அதிபர் எம். சீ எஸ். பாயிஸா ஆகியோருடன் மேலும் பலரும் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்விற்கு அனுசரணையினை ஸ்ரீலங்கா முஸ்லிம் ஏய்ட் நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு



சிலாபம் வலய மட்ட ரீதியில் நடைபெற்ற (2024) சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்கு பற்றி மாகாண மட்ட போட்டிக்கு சிலாபம் சென் பேர்னட் கல்லூரியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களையே படத்தில் காணலாம். இவர்களுக்கு பாடசாலை சார்பாக அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

**(படம் உடப்பு குறூப் நிருபர்)**

# Traveler Football Club ஏற்பாட்டில் புதிய கால்பந்து 'app' அறிமுகம்

**ருஸைக் பாரூக்**





Traveler Football Club ஏற்பாட்டில் 'Koach Hub' எனும் புதுமையான கால்பந்து விளையாட்டு புதிய தொழில்நுட்ப 'app' கால்பந்தாட்டத்திற்கு ஏற்றவாறு அண்மையில் கொழும்பு ரமடா ஹோட்டலில் Traveler Football Club தலைவர் ரிஸ்மி ரியால் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது.

Koach Hub 'கோச் ஹப்பின்' இணை நிறுவனர் கமிலா அமரசிங்க அறிமுகத்தை வழங்கினார். பல ஆண்டுகளாக கோச் ஹப்பின் முற்போக்கான வெற்றியை அவர் வெளிப்படுத்தினார்.

தற்போது 13 நாடுகளைச் சேர்ந்த நாற்பது கழகங்களுடன் 2500 வீரர்கள் பதிவுசெய்துள்ளனர். பயிற்சி அட்டவணைகள், மருத்துவப் புதுப்பிப்புகள், வீரரின் முழு விவரங்கள், முன்னேற்றம் மற்றும் பிற அம்சங்கள் போன்ற அந்தந்த கால்பந்து தகவல்களை முன்னோட்டமிடக்கூடிய பயிற்சியாளர்கள், வீரர்கள் மற்றும் பெற்றோர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் 'app' முழுமையான பங்களிப்பை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (FFSL) தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் Koach Hub இன் தலைவர் பாயிக் பாயிஸ் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

இந்த விழாவில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (FFSL) தலைவர் ஜஸ்வர் உமர், Koach Hub இன் தலைவர் பாயிக் பாயிஸ் மற்றும் KoacH ஹப்பின் இணை நிறுவனர் கமிலா அமரசிங்க ஆகியோருக்கு டிரவலர் குளோபல் நிறுவனத்தின் தலைவர் ரிஸ்மி ரியால் பாராட்டுச் சின்னங்களை வழங்கினார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் பிரதிநிதிகள், கால்பந்தாட்ட கழகங்களின் உறுப்பினர்கள், கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் மற்றும் ஊடகவியலாளர்கள் இந்த வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

# அநுராதபுரம் மாநகர சபைக்கு 'கோல்டன் சிட்டி' விருது

**கல்நேவ தினகரன் விசேட, அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள்**

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கோல்டன் சிட்டி' 2024 தேசிய விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் 24 மாநகர சபைகளில் சிறந்த மாநகர சபைக்கான தங்கப் பதக்க விருது அநுராதபுரம் மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க மற்றும் மாநகரசபை அதிகாரிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மாநகரசபை வெற்றியீட்டிய ஒன்பது பிரிவுகளுக்கும் வாழ்த்துக்களை வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.



எட்டு வருடங்களின் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான கோல்டன் சிட்டி தேசிய விருது வழங்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட 09 துறைகள் பரிசீலிக்கப்பட்டதுடன், ஒன்பது துறைகளிலும் முதலாம் இடத்தை அநுராதபுரம் மாநகர சபை பெற்றுக் கொண்டது.

# திருகோணமலை மாவட்டத்தில் ஷஹ்மி ஷஹீதுக்கு வரவேற்பு

நடைபவணியாக நாட்டைச் சுற்றிவரும் நோக்குடன் கடந்த 13 ஆம் திகதி தன் பயணத்தை ஆரம்பித்த ஷஹ்மி ஷஹீத் தற்பொழுது கிழக்கு மாகாணத்தை சென்றடைந்துள்ள நிலையில் அங்குள்ள பொதுமக்களால் அவருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக்கோயில், காத்தான்குடி, மருதமுனை, ஏறாவூர், ஒட்டமாவடி போன்ற தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய பிரதேசங்களில் பாரிய வரவேற்பளிக்கப்பட்டது.



கிழக்கின் இளைஞர் அமைப்புக்கள், நலன்புரி சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், பொதுமக்கள் என அனைவராலும் பேருவளையின் சரித்திரப் புதல்வன் சஹ்மி ஷஹீதை வரவேற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், ஷஹ்மி ஷஹீத் தன் சாதனை பயணத்தை வெற்றிகரமாக முடித்து பேருவளை வந்தடையும் போது அவரை பிரமாண்டமான முறையில் வரவேற்பதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக, சிமி ஹோல்டிங் பிரைவட் லிமிடட் உரிமையாளர் இஜ்லான் யூசூஃப் தினகரனுக்கு தெரிவித்தார்.

## SLPP, UNP முன்னாள் மாகாண, உள்ளூராட்சி...

செல் வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீற முடியாது. தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைவரினதும் பொறுப்பு.

ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் கொலை அதிருப்தியளிப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் , ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஏனைய உலக நாடுகளில் ஏற்படக்கூடிய நிலைமைகள் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்க்கத தேவையான தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

எனக்காக இங்கு வந்து என்னை ஆதரித்த அனைவருக்கும் நன்றி. நாம் அனைவரும் 2022 ஜூலை மாதத்தில் வீடுகளை இழந்தோம். இந்த நாட்டுக்கு எதிர்காலம் இருக்காது என்றே மக்களும் நினைத்தனர்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்று பலரும் நினைத்தனர். ஏன், இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்றீர்கள் என்று சிலர் என்னிடம் கேட்டனர். நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது என்று சொன்னேன். மொட்டுக் கட்சிக்கு அதற்கான அனுபவம் உள்ளதா என்று சிலர் கேள்வி எழுப்பினர். இருப்பவர்களை வைத்து வேலை செய்வதே சிறந்தது. மாறாக புதியவர்களை வடிவமைக்க எமக்கு நேரம் இருக்கவில்லை. அதனால் இந்த பயணத்தை தொடர்வோம் என்றேன். இப்போது நல்ல குழுவொன்று உருவாகியுள்ளது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என அனைவரும் ஒன்றிணைந்து முதலில் நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்கினோம். அன்று நாட்டில் பெரும் அச்சம் நிலவியது. எம்.பி.க்கள் வீதியில் கொல்லப்பட்டால் நாட்டின் நிலை என்னவாகும்? அப்படிப்பட்ட நிலையை நாம் கடந்து வந்திருக்கிறோம்.

நாட்டை வழமையான நிலைக்கு கொண்டு வரவும், வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கவும் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளோம். அதனால் அந்த பணிகள் முடிந்துவிடவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி நாம் செயல்பட வேண்டும். அதை உடைத்தால் நாடு மீண்டும் படுகுழியில் விழும்.

அவர்கள் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே எமக்கு நிதி உதவிகளை வழங்குகின்றனர். நாமும் அதற்கு உடன்பட்டிருக்கிறோம். அதற்கமையவே பயணிக்க வேண்டும். டிசம்பர் வரை போதுமான பணம் மட்டுமே எம்மிடம் உள்ளது. ஜனவரியில் சர்வதேச நாணய நிதியத்துடன் மற்றுமொரு ஒப்பந்தத்தை கைச்சாத்திட வேண்டியுள்ளது.

ஜனவரி, பெப்ரவரிக்குள் அந்த பணம் கிடைத்துவிடும். ஆனால், இது குறித்து புதிதாக ஆராய நீண்ட காலம் தேவைப்படும். அதன் பின்னர் இந்த பணிகளை நிறைவு செய்ய ஒரு வருடமாவது தேவைப்படும். பணம் இல்லாமல் நாம் முன்னேற முடியாது. எனவே, இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து பணத்தைப் பெறுவதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள இளைஞர்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். அவர்களுக்கு தொழில் வழங்க வேண்டும். வறுமையை ஒழித்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். அந்த நடவடிக்கைகளுக்காக நான் 09 மாகாண அரசாங்கங்கள் மற்றும் மத்திய அரசாங்க உள்ளடங்களாக 10 அரசாங்கங்களின் கீழ் உள்ள அனைவருக்கும் பொறுப்புகளை வழங்குவோம்.

புதிய கோணத்தில் முன்னோக்கி கொண்டுச் செல்லவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன். இந்த பயணத்தை தொடர்வோம். அனைவரும் இணைந்து முன்னேறுவோம்.

2022 இல் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் பெரும்பான்மையானவர்கள் என்னை ஆதரிக்க தீர்மானித்துள்ளனர். அந்த ஆதரவு இல்லாவிட்டால் இன்று நாடு இந்த நிலையை அடைந்திருக்காது. எனவே அந்த தீர்மானத்தை எடுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி கூறுகிறேன்.

அவரின் தீர்மானம் நாட்டைக் காப்பாற்றியது. கட்சிகளை பிளவுபடுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. முடிந்தவரையில் கட்சிகளை பாதுகாத்துக்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும்.

இன்று உலகில் பல பிரச்சினைகள் உள்ளன. ஹமாஸ் தலைவர் காலை தெஹ்ரானில் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலை கண்டிக்கிறேன். காஸா போர் குறித்து ஒரு தீர்வை எட்டியிருக்கலாம் அவ்வாறான நிலையில், இவ்வாறான பிரச்சினைகளால் மத்திய கிழக்கு நாடுகளில் மீண்டும் பிரச்சினைகள் தீவிரமடையும். இதில் எமக்கு உடன்பாடு இல்லை. ஒரு நாடாக வாழ்வதற்கான உரிமையை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும்.

அந்த சர்வதேச பிரச்சினை காரணமாக மேலும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. போர் நடந்தால் எண்ணெய் விலை என்னவாகும்? ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் மத்திய கிழக்கில் உள்ள அனைவரையும் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர வேண்டி வரும். 1991 இல் குவைத் கைப்பற்றப்பட்ட போது அவ்வாறான நிலைமை காணப்பட்டது. அப்போது வருமானத்தை இழக்க நேரிட்டது. வளர்ந்து வரும் நாடாக இலங்கைக்கு இந்த நிலையை எதிர்கொள்வது கடினமாகும்.

இது தொடர்பில் ஏனைய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் கலந்துரையாடுமாறு வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்தேன். இந்நிலைமையைக் கட்டுப்படுத்த கூட்டாகச் செய்யக்கூடிய வேலைத் திட்டம் குறித்து ஆலோசிக்கிறோம். நமது சபாநாயகர் தற்போது தெஹ்ரானில் இருக்கிறார். அவரை விரைவில் அழைத்து வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்த சூழ்நிலைகளுக்கு நாம் இப்போதே தயாராக வேண்டும். அதற்காக பிரதமர், வெளிவிவகார அமைச்சர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் ஆகியோர் தலைமையிலாக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகள் குறித்து ஆராய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தலைமையில் நிதி அமைச்சு, எரிசக்தி அமைச்சு மற்றும் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

எனவே, எத்தகைய சூழலையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகிறது. மேடையில் இருந்து கூச்சலிடுவதில் அர்த்தமில்லை. பொருளாதாரத்தை பாதுகாத்து முன்னேற வேண்டும். சர்வதேச ஒப்பந்தங்களை திரும்பப் பெற முடியாது. அதை பாதுகாத்து முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். தேர்தல் வந்தாலும் அது நமது கடமையாகும்.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். இந்தத் தேர்தலை 1988 முறைப்படி நடத்த எதிர்பார்க்கிறோம். இது குறித்து நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் பேசினேன். அவரும் இணக்கம் தெரிவித்தார். அந்தத் தேர்தலில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்காமல் மாகாண சபைகளுக்கு போட்டியிட வாய்ப்பு கிடைக்கும். அனைவரும் அரசாங்கமாக செயலாற்ற வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஒன்பது பேருடன், அரசாங்கத்தின் கீழ் நிதி அமைச்சர்கள் குழுவும் உள்ளது. அரச சபையொன்றையும் முன்மொழியவிருக்கிறோம். அதில் ஜனாதிபதி, பிரதமர், கட்சித் தலைவர்கள் மற்றும் முதலமைச்சர்கள் அங்கம் வகிப்பர்.

2017 ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திருத்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின்படி 07 மாகாணங்களின் முதலமைச்சர்கள் செயற்பட்டு வருகின்றனர். தமிழ் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. பொலிஸ் அதிகாரம் பற்றி பின்னர் பேசலாம், இந்த நடவடிக்கைகளை இப்போது நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்துள்ளோம். விவசாயம் நவீனமயமாக்கல், பாடசாலைக் கல்வி, சுற்றுலாப் பொறுப்புகள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். எம்மிடம் பெரிய பணிக்குழுவொன்று உள்ளது. இந்த 10 அரசாங்கங்கள் ஊடாக நாட்டை முன்னேற்றிச் செல்ல எதிர்பார்க்கிறோம்." என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## வீழ்ந்த நாட்டை இரண்டு...

என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே அடுத்த ஐந்து வருடங்களுக்கு அந்தத் தலைமையை தெரிவு செய்வது சரியான மற்றும் நியாயமான முடிவாகுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,

இந்த ஆண்டு முதலீட்டுச் சபைக்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கும் கொடுக்கப்பட்ட முதலீட்டு இலக்கு ஒரு பில்லியன் டொலர்கள் ஆகும். இதுவரை 800 மில்லியன் டொலர் முதலீடுகள் நாட்டிற்கு வந்துள்ளன. ஆனால் இந்த ஆண்டு இறுதிக்குள் இரண்டு பில்லியன் டொலர் இலக்கை நோக்கி செல்ல முடியும் என்று நாம் நம்புகிறோம்.

2024ஆம் ஆண்டிற்கு திருகோணமலை, பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் 35 திட்டங்களுக்கு முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், தேர்தல் தொடங்குவதால் முதலீடுகள் ஓரளவு குறையலாம் என நம்புகிறோம். ஆனால் இது ஒரு சாதாரண நிலை என்பதைக் கூற வேண்டும்.

அத்துடன், புதிய பொருளாதார பரிமாற்றச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர், பொருளாதார ஆணைக்குழு ஊடாக முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான அனைத்து முடிவுகளும் அதன் உறுப்பினர்களால் எடுக்கப்பட வேண்டும். மேலும், மிகக் குறுகிய காலத்தில் முதலீடுகளுக்கு அனுமதி அளிக்கும் வேலைத்திட்டமும் உள்ளது.

நாம் புதிதாக நிறுவிய சர்வதேச வர்த்தக அலுவலகம் (Office of International Trade) தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் பிரவேசிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது. வரியின்றி ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், போர்ட்சிட்டி திட்டத்தின் 80% கட்டுமானப் பணிகள் இதுவரை முடிவடைந்துள்ளன. தற்போது அதற்கு குடிநீர் மற்றும் மின்சார விநியோகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் வர்த்தக நடவடிக்கைகளை தொடங்குவதற்கு வர்த்தக மூலோபாய முக்கியத்துவம் சட்டத்தின் கீழ் (Business strategic Importance) அனுமதி பெற வேண்டும்.

அதற்கு, விண்ணப்பதாரர்கள் தங்கள் திட்ட அறிக்கையை போர்ட்சிட்டி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதுவரை, நாங்கள் இருபதுக்கும் மேற்பட்ட BSI களை அமைச்சரவைக்கு வழங்கியுள்ளோம். சுமார் ஐம்பது BSI அமைச்சரவைக்கு வழங்கப்பட உள்ளன.

## இன்னும் சில தினங்களில்...

உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், பால்மாவின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை, குறைக்கக்கூடிய விலைகள் தொடர்பில் ஆராயுமாறு தற்போது நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நுகர்வோருக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் இறக்குமதியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## இலங்கை குறித்து ஆராய...

கண்காணிப்பதற்கான உயர்மட்ட குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## கம்பனிகளின் முன்மொழிவு...

ஏப்ரல் 30 இல், வெளியிடப்பட்டது. இதனை உறுதி செய்யும் வகையில் மீண்டும் மே, 21 ஆம் திகதியும் வர்த்தமானி வெளியானது. எனினும் இந்த வர்த்தமானிகள் இரண்டும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,500 ரூபா அடிப்படைச் சம்பளமும் மேலதிக கொடுப்பனவாக 150 ரூபாவுமென 1500 ரூபா சம்பளத்தை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பி. சக்திவேல் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான...

குறிப்பிட்டுள்ளது. எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் போதிய பணியாளர் இல்லாததால் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் சில தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக பல பல்கலைக்கழகங்கள் அதற்கான அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன்படி, அடுத்த மாத இறுதிக்குள் வெட்டுப்புள்ளிகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 43,000 க்கும் அதிகமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Dr. அர்ச்சுனாவுக்கு எதிரான...

அத்தியட்சகர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி, வழக்கின் இரு தரப்பினரும் வைத்தியத் துறை சார்ந்தவர்களென குறிப்பட்டதுடன், வழக்கை இணக்க சபைக்கு மாற்றுமாறு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இதற்கு முறைப்பாட்டாளர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்ததுடன், வைத்தியர் பொலிஸ் நிலையம் சென்று தாம், குற்றம் சாட்டிய நபர்கள் தொடர்பிலான ஆதாரங்களை இதுவரையில் வழங்காதமை தொடர்பிலும் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர். இதனை தொடர்ந்து வழக்கை எதிர்வரும் 09ஆம் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், வைத்தியரை பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் வழங்குமாறும் உத்தரவிட்டது.

## T 56 ரக துப்பாக்கிகளுடன்...

பொலன்னறுவை அரலகங்வில விஷேட அதிரடிப்படையினர் மற்றும் பொலன்னறுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து ரீ 56 ரக துப்பாக்கிகள் இரண்டு, வாள்,பைனகுளோர் மற்றும் 59 துப்பாக்கி ரவைகள் அடங்கிய 02 மெகசீன்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரிடம் புலனாய்வுத்துறையினர் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆயுதங்களையும் சந்தேக நபரையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் பந்துல குணவர்த்தனவின்...

இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் விஷேட பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் நிரோஷன் லக்மால் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமது பிரத்தியேக பணியாற்றொகுதியில் பணிபுரிந்த முன்னாள் ஊடகச் செயலாளர் மகேஷ் விக்கிரம என்பவரே, தமது அனுமதியின்றி இந்த கடன் அட்டையை உபயோகித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தமது தனிப்பட்ட பணியாற்றொகுதியில் பணியாற்றிய முன்னாள் ஊடக செயலாளரை பல்வேறு முறைகேடுகள் காரணமாக சேவையிலிருந்து நீக்கியதாகவும் முறைப்பாட்டாளரான அமைச்சர் தெரிவித்துள்ளதாக குற்றத் தடுப்பு விசாரணைத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

## யாழ். கிழக்கு பல்கலைகழகங்களில்....

இவ்விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் மத்தியில் சுதேச மருத்துவம் தொடர்பான நல்லபிப்பிராயம் காணப்படுகிறது. மாணவர்கள் மத்தியிலும் சுதேச மருத்துவத்தினை தெரிவு செய்வதில் அண்மைக் காலத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதையும் அவர் சுட்டிக்ககாட்டினார்.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகம் ஆகியவற்றில் இயங்கி வரும் சித்த மருத்துவ கற்கை நெறிகளை சித்த மருத்துவ பீடங்களாக தரமுயர்த்தி வளங்களை அதிகரிப்பதன் மூலம், எமது பிரதேசங்களில் தரமான சுதேச மருத்துவ பாரம்பரியத்தை கட்டமைக்க முடியுமெனவும் சுட்டிக் காட்டியிருந்தார்.

## குற்றவாளிகளின் மனு...

விதிக்கப்பட்ட ஆறு குற்றவாளிகளின் மேன்முறையீட்டு மனுவே அடுத்த வருடம் ஜனவரியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய 05 பேரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, மேற்படி வழக்குடன் தொடர்புடைய பிரதிவாதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்திக்கு அறிவித்தனர். இந்த வழக்கு தொடர்பான மொழி பெயர்க்கப்பட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதால், பிரதிவாதிகள் 08 வருடங்களுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாக பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார் . இதன்போது, வழக்கு தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பதாக சொலிசிட்டர் ஜெனரல் அயேஷா ஜனசேன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்...

செலுத்தினர். ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், முஜிபுர் ரஹ்மான், பேராசிரியர் சரித்த ஹேரத், எஸ். எம்.மரிக்கார் உள்ளிட்ட சிலரும் கட்டுப் பணம் செலுத்தச் சென்றிருந்தனர்.

ஜனாதிபதி தேர்தலுக்காக நேற்று முன்தினம் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட நான்கு பேர் கட்டுப் பணத்தை செலுத்தியிருந்தனர்.இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று கட்டுப் பணம் செலுத்தியதால் அந்த எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21 நடைபெற உள்ளதால், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த (26) ஜனாதிபதி தேர்தலுக்கான தமது கட்டுப்பணத்தை செலுத்தினார். அவரது சார்பில் சட்டத்தரணி ரொனல்ட்சி பெரேரா கட்டுப்பணத்தை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுயாதீன வேட்பாளர்களான சரத் கீர்த்திரத்ன, ஓஷல ஹேரத், ஏ.எஸ்.பி லியனகே மற்றும் நேற்றைய தினம் சஜித் பிரேமதாசவும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

## இன்றைய பலன்கள்

(01.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** 
கூட்டுத் தொழில் வியாபாரம் லாபம் தருவதாக அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**ரிஷபம் :** 
சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும்.புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் பொருளாதாரம் முன்னேற்றமும் உண்டு.

**மிதுனம்:** 
சிறிய பிரச்சனையும் உயர் அதிகாரிகளுக்கு பெரிய பிரச்சினையாக தோன்றலாம் .கவனமாக செயல்படுங்கள்.

**கடகம்:** 
கூட்டுத் தொழில் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும் வழக்கமான லாபம் குறையாது.

**சிம்மம்:** 
சொந்தத் தொழில் சுறுசுறுப்பாக நடந்தாலும் கிடைக்க வேண்டிய ஆதாயம் கிடைக்காது .

**கன்னி:** 
தொழிலை விரிவு படுத்த கூட்டாளிகளுடன் இணைந்து ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்படும்.

**துலாம்:** 
சக பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** 
குடும்பத்தாரிடம் சுமூகமாக நடந்து கொள்வது பிரச்சினைகளை தவிர்க்க உதவும். கலைஞர்கள் தொழில் நிமித்தமா கலந்து கொள்ளும்போது கவனம் தேவை.

**தனுசு:** 
புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகமும் அதனால் தொழில் ரீதியான வளர்ச்சியும் ஏற்படும் .

**மகரம்:** 
புதிய வாடிக்கையாளர் ஒருவரின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள். கூட்டுத் தொழிலில் வழக்கத்தை விட லாபம் பெருகும்.

**கும்பம்:** 
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். கலைஞர்கள் தங்கள் பணிகளில் சுறுசுறுப்பு காட்டுவர்.

**மீனம்:** 
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற தீவிரமாக முயற்சி செய்வீர்கள். பங்குச்சந்தையில் லாபம் பல பொறுமை அவசியம்.

## ரணில் ஜனாதிபதி...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் மனசாட்சிக்கு நேர்மையாக சிந்தித்து ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக தாம், செயற்படுவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் தாம் தொடர்ந்தும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் என்றும்.தமது முன்னுதாரணமான மானசீகத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர், சிறந்த உடல் நலத்துடன் மஹிந்த வாழ்வதற்காக பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வங்குரோத்திலிருந்து...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வந்ததன் மூலம், ஒரு முதிர்ச்சியடைந்த அரசியல்வாதி என்ற வகையில் தனது பொறுப்பையும் சவாலையும் சரியாக வெற்றி கொண்ட தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சுட்டிக்காட்ட முடியும்.

சில தலைவர்கள் இந்த சவாலை ஏற்காமல் விலகிய நேரத்தில், தனது சாதக பாதகங்களை பொருட்படுத்தாமல், நெருக்கடியை சமாளித்து, இரண்டு வருடங்கள் எனும் குறுகிய காலத்தில் நாட்டை ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வர ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். ஒரு நாட்டை ஆள்வதற்கு குறுக்குவழிகள் இல்லை என்பதோடு, ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப மக்கள் விரும்பாத முடிவுகளை எடுக்க நேரிடும். இதற்கான தலைமைத்துவம், அனுபவம், முடிவெடுக்கும் திறன் ஆகியன ஒரு தலைவருக்கு முக்கியமானதாகும்.

எந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகிறதோ அந்த நாட்டில்தான் சோசலிச சிந்தனைகள் உருவாகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் சில நாடுகளில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் அவை அந்த நேரத்தில் ஏற்படும் ஒரு நிலைமையாக அமைந்தன. அது ஒரு சமூகத்தையோ அல்லது நாட்டையோ முன்னோக்கி கொண்டு செல்லும் திறனைக் கொண்டிருக்கவில்லை. தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட பின்னர், ஏனையோருக்கும் ஏதாவது செய்ய வேண்டும் எனும் நிலையிலேயே ஒருவர் அரசியலுக்கு வர வேண்டும்.

## சாரணர் எண்ணிக்கை...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும். சாரணர் இயக்கம், கெடெட் படைப்பிரிவு மற்றும் இளைஞர் படையணி என்பவற்றுக்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. ஏனைய அமைப்புகளின் செயற்பாட்டிற்கும் அரசாங்கத்தினால் ஒரு தொகை நிதியை வழங்க எதிர்பார்க்கிறோம்.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது திறைசேரியில் பணமிருக்கவில்லை. ஆனால் தற்பொழுது அரசாங்கத்திடம் நிதி இருப்பதால் இவ்வாறு பணம் ஒதுக்க முடிந்துள்ளது. நாம் இப்போது கடினமான காலங்களை கடந்துவிட்டோம். நஷ்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களுக்கு பணம் கொடுப்பதை இப்போது நிறுத்திவிட்டோம். மேலும், வெளிநாட்டு கடன்களும் நிறுத்தப்பட்டுள்ளன. நாம் செலுத்த வேண்டிய கடன் தொகையும் குறைந்துள்ளது. எனவே இப்போது அரசிடம் ஓரளவு பணம் உள்ளது. அந்த பணத்தை இளைஞர்களுக்காக பயன்படுத்த எதிர்பார்கிறேன்.

## ஆகஸ்ட் 01 முதல் Online...

மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்கு முன் இருந்தது போன்று ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து காலை 10 மணிக்கு மாற்றுவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

## ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை...

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டாமென கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடி அடுத்த இரண்டு நாட்களுக்குள் தீர்மானம் எடுப்பாரென ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் ஊழல் ஒழிப்பு சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர்...

இது தொடர்பாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

ஈரானில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதையடுத்து, ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலகில் ஏற்படக் கூடிய நிலைமையினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதுகாப்பு, பொருளாதார பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தமாக தேசிய பாதுகாப்பு தொடர்பான குழுவையும், பொருளாதாரம் தொடர்பான குழுவையும், இவற்றைக் கண்காணிக்க உயர் மட்டக் குழுவையும் நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

# தர்கா நகரில் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு










**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகர் ஸாஹிரா, அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை மற்றும் அல்ஹம்ரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது. மேற்படி கல்வி நிலைய ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம், இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் ரூமி ஹாஷிம் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். பலபிட்டிய அஷ்ஷரியா மத்ரஸா அதிபர் மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) விசேட சொற்பொழிவாற்றினார். மேற்படி கல்வி நிலையம் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து பரிசில்களை வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளாகத்தில் நடைபெற்ற

# 'திறந்த ஜாமிஆ தினம் மற்றும் திறந்த மஸ்ஜித்' நிகழ்வு

### மூவினங்களையும் சேர்ந்த சமயத்தவர்கள் பங்கேற்பு







'திறந்த ஜாமிஆ தினம் மற்றும் திறந்த மஸ்ஜித்' நிகழ்வு பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளாகத்தில் அண்மையில் (23) முழு நாள் நிகழ்வாக நடைபெற்றது.

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் வரலாற்றில் மற்றொரு மைல்கல்லாக நோக்கப்படும் இந்நிகழ்வு பல்லின சமயத்தவர்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் சமூகங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதில் மிகப்பெரும் பங்கை வகிக்கும் எனக் கருதப்படுகிறது.

ஜாமிஆ நளீமிய்யாவின் ஒரு பிரிவான சமாதானத்துக்கும் உரையாடலுக்குமான ஸலாம் நிலையம், இஸ்லாமிய கற்கைகளுக்கான மத்திய நிலையத்துடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்வில் முஸ்லிம்கள் அல்லாத ஏனைய சகோதர மதங்களைச் சேர்ந்த சுமார் 500 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் ஆரம்ப வைபவம் நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வர் உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மதின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.எம். ரிப்லான் பிரதம அதிதியாகவும் பேருவளை பிரதேச செயலாளர் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

பேருவளை பிரதேசத்தில் உள்ள மதஸ்தலங்களின் பிரதான மதகுருமார்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், நகர சபை அதிகாரிகள், வைத்தியசாலை உயர் அதிகாரிகள், சுகாதார சேவை உத்தியோகஸ்தர்கள், கிராம சேவகர்கள், மதங்களுக்கிடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்காக உழைக்கும் நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆரம்ப வைபவத்தில் ஜாமிஆ கலாபீடத்தின் முதல்வர் வரவேற்புரை மற்றும் அங்குரார்ப்பண உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கலாபீடம் பற்றிய சிங்கள மொழியில் அமைந்த ஒரு காணொளி திரையிடப்பட்டது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.07.30
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5550
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,214,104.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 0 1 0 2 6 2

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 125
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 0 2 6 2
ரு. 1,000,000/- இலக்கம் 273879
ரு. 500,000/- இலக்கம் 368895
மோட்டார் சைக்கிள் இலக்கம் 469088
ரு. 500/- இலக்கம் 601

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3792 சீட்டிழுப்பு திகதி 2024.07.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,158,821.12
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 03 10 42 45 விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 68986

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1898 2024.07.30
59686
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 440,557,954.00
ஆங்கில எழுத்து P சுப்பர் இலக்கம் 22 வெற்றி இலக்கங்கள் 45 54 62 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.07.30 சீட்டிழுப்பு இலக்கம் 0376
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 0 8 0 6 7 6
L7 எழுத்து T
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,616,656.48

ராசி சுப பலன்
திகதி 2024.07.30 சீட்டிழுப்பு இலக்கம் 859 செவ்வாய்
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,120,872.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 15 23 27 31
தனயோக இலக்கம் 07881 நாளுக்கான விதி எண் 10

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1580 2024.07.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,884,245.92
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 12 32 72 77 விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 63923


## அறிவித்தல்

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**கலைமாணி சங்கீதம் சிறப்பு பாடநெறி (Uni - code 068C)**

**பல்கலைக்கழக அனுமதி 2023/2024 கல்வியாண்டு**

**(2023 க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில்)**

**திறன் தேர்வுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

2023ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/தரம்) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2023/2024 கல்வியாண்டுக்கான பின்வரும் தகுதிகளைப் பெற்றவர்கள், மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக சேர்க்கைக்கான தகுதிகளை பூர்த்தி செய்தவர்களிடமிருந்து திறன் தேர்வுக்கான விண்ணப்பங்கள் 29.07.2024 முதல் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கும்போது உத்தர பாரத ராகதாரி சங்கீதம், வயலின், சிதார், தபேலா ஆகிய பாடங்களில் ஒன்றை முக்கியப் பாடமாகப் படிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும். வட இந்திய ராகதாரி சங்கீதத்திற்கு மாத்திரம் திறன் தேர்வு நடத்தப்படும்.

1. அனுமதிக்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகள்,

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பாடநெறிக்கு படிப்புகளுக்கான சேர்க்கை, கல்வியாண்டு 2023/2024 க.பொ.த (உ/தரம்) 2023" என்ற மாணவர் கையேட்டின்படி பல்கலைக்கழகத்தில் சேருவதற்கான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

2023 இல் க.பொ.த (உ/தரம்) பரீட்சையில் சங்கீத பாடத்திற்கு குறைந்தபட்சம் கிரெடிட் பாஸ் (C) உடன் மூன்று பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) பல்கலைக்கழக அனுமதிக்கு மேற்கூறிய குறைந்தபட்ச தகுதிகளைப் பெற்ற மாணவர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் திறன் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இணைய பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை https://dev.fhss.sip.ac.lk/aptitude-test-ba-hons-mus-2024/ என்ற இணைப்பினூடாக Online மூலம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 2024.08.10 ஆகும்.

திறனறித் தேர்வில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்களிடம் ரூ.2000.00 வசூலிக்கப்படும். "கணக்கதிகாரி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்" என்ற பெயரில் கங்கொடவில மக்கள் வங்கியின் கிளையிலுள்ள 097-1-00150005005 என்ற கணக்கிற்கு மக்கள் வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் இருந்து பணம் செலுத்தப்பட வேண்டும். வேறு எந்த முறையிலும் பணம் செலுத்துவது ஏற்றுக்கொள்ளப்படாது.

விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும் மற்றும் அவற்றின் அசல் பிரதிகளை தகுதித் தேர்வுக்கு தோன்றும் தேதியில் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i) மக்கள் வங்கியில் பணம் செலுத்தப்பட்ட ரசீது

iii) தேசிய அடையாள அட்டை

iii) 2023 க.பொ.த (உ/தரம்) பெறுபேற்று அட்டவணை (பாடசாலை பரீட்சார்த்தியாக இருந்தால் அதிபராலும் அல்லது தனியார் பரீட்சார்த்தியாக இருந்தால் கிராம சேவை அலுவலராலும் சான்றளிக்கப்பட வேண்டும்.)

3. அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமையற்ற அல்லது தவறான தகவல்களை உள்ளடக்கியவை நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் செலுத்திய பணம் திருப்பி செலுத்தப்பட மாட்டாது.

4. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைமாணி சங்கீதம் பட்டத்திற்கான திறன் தேர்வில் தோற்றும் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

5. இந்த திறன் தேர்வு தொடர்பான மேலதிக தகவல்கள் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட இணையப் பக்கத்தில் வெளியிடப்படும்.

(உள்நுழைய:- https://dev.fhss.sjp.ac.lk/aptitude-test-ba-hons-mus-2024/)

மேலும் தேர்வு தொடர்பான தகவல்கள் தகுதியான விண்ணப்பதாரர்களின் மின்னஞ்சலுக்கு (Email) மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். தபால் மூலம் அனுப்பி வைக்கப்படமாட்டாது. இந்தத்திறன்காண் தேர்வு சிங்கள மொழி மூலம் (அல்லது தேவைப்பட்டால் ஆங்கில மொழி மூலம்) மாத்திரம் நடாத்தப்படும்.

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில, நுகேகொட**

# கிழக்கின் குரல்



சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரம்

## தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்து குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த நடவடிக்கை

(பாலமுனை விசேட நிருபர்)

தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆகஸ்ட் 1 முதல் 7ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி சுகாதார அமைச்சினால் தாய்ப்பாலூட்டல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த மதிப்பீடு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள



குழந்தைப் பேறு இடம்பெறுகின்ற சகல வைத்தியசாலைகளிலும் இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்படவிருப்பதனால் இதுதொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் வகையில் பயிற்சிக் கருத்தரங்கு (30) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கல்முனை பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ துறையை சார்ந்தோர் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தாய்ப்பாலின் மகத்துவம், தாய்ப்பாலால் ஏற்படும் உடல், உள மற்றும் ஆத்மீக நன்மைகள், தாய்ப்பாலூட்டல் சம்பந்தமான சட்ட கோவைகள், தாய் சேய் நேய வைத்தியசாலைக்குரிய 10 படிமுறைகள் எனும் தலைப்பில் விரிவுரையாற்றப்பட்டன. அத்துடன் குறித்த வேலைத்திட்டத்தை இணையத்தின் ஊடாக மதிப்பீடு செய்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

## புல்மோட்டை பிரதேசத்தில் நீர்விநியோகம் முற்றாகத்தடை

புல்மோட்டை தினகரன் நிருபர்

புல்மோட்டைப்பிரதேசத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பிரதேச பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் கடந்த சில நாட்களாக வழங்கப்படாமையால் சுமார் 1900 பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வரட்சியான காலநிலை நிலவுவதால் தூரப்பிரதேசங்களான ஜின்னா புரம், சதாம் நகர், பிலால் நகர் மற்றும் ஹமாஸ் நகர் போன்ற பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். இதுகுறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுகேட்ட போது ஓரிரு நாட்களில் நீர் விநியோகம் வழமைக்கு திரும்பும் என அவர் தெரிவித்தார்.

## நற்பிட்டிமுனையில் வீசப்படும் மாசிச உணவு கழிவுகளால் குடியிருப்பாளர்கள் அசௌகரியம்

(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை குளப்பகுதியில் தினமும் கொட்டப்படும் மாசிச உணவு கழிவுகளால் குடியிருப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தாளவெட்டுவான் சந்தியிலிருந்து நற்பிட்டிமுனை நோக்கி செல்லும் பழைய இ.மி.சபை வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இத்தகைய மாசிச உணவு கழிவுகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதியிலுள்ள குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை அப்பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநரசபையிடமும் பொதுச்சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென அங்



குள்ள குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்படியான சூழலில் நேற்றும் கூட அங்கு மாசிச உணவு கழிவுகள் வீசப்பட்டிருக்கின்றன. இது அப்பகுதி சூழலை மாசுபடுத்துவதோடு மக்களுக்கு நோய்களையும் உருவாக்கி வருகின்றது.

## அக்கரைப்பற்றில் சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வு



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அக்கரைப்பற்று பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சமுதாய மட்டத்தில் அமைக்கப்பட்ட 'சிறுவர் பாதுகாப்பு' தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸாரின் ஆலோசனைக்கமைவாக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச். றிபாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் திருமதி. ஏ.எம்.சந்தியா குமாரி பிரதம அதிதியாகவும், அப்பிரிவின் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவள உத்தியோகத்தர், முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி கள உத்தியோகத்தர் மற்றும் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

45 பேர் கலந்து கொண்ட இச்செயலமர்வில், சிறுவர் பாதுகாப்பு மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சமூக மட்டத்தில் உருவாக்கப்பட்ட குழுவினர் பேசி தீர்க்க வேண்டும் என்றும் அக்குழுவினருக்கு அறிவுரையும் வழங்கப்பட்டது.

## அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்தியாலய புதிய அதிபராக அஜ்மல் நியமனம்

(பாலமுனை விசேட நிருபர்)



அட்டாளைச்சேனை தைக்காநகர் ஸஹ்றா வித்தியாலயத்தின் அதிபராக அட்டாளைச்சேனையை சேர்ந்த ஏ.எல். அஜ்மல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸஹ்றா வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய எம். எஸ்.எம்.பைறூஸ் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ஏ.எல்.அஜ்மல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபராக நியமிக்கப்பட்ட அஜ்மல் கடந்த திங்கட்கிழமை (29) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் அட்டாளச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.றஸ்மி உள்ளிட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஸஹ்றா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில்

## சிறுபோக நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமான களஞ்சியசாலைகளை திறந்து விவசாயிகளிடமிருந்து சிறுபோக நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக கமத்தொழில் அமைச்சருக்கு அம்பாறை மாவட்ட விவசாய அமைப்புகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளதால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற்களஞ்சிய சாலைகள் இதுவரை திறக்கப்படாமல் உள்ளதாகவும், நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தரவாத விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யாமல் இருப்பதால் மிகவும் குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகள் நெல்லை கொள்வனவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறைந்த விளைச்சல் மூலம் கிடைக்கும் நெல்லை விவசாயிகள் தனியாருக்கு குறைந்த விலைக்கே விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள நெல் களஞ்சியசாலைகளை திறந்து அரசாங்கம் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சுவாமி விபுலானந்தரின் 77 ஆவது நினைவு தினம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

சுவாமி விபுலானந்தரின் 77 ஆவது நினைவு தினம் (30) திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விலாசபை ஆலோசகருமான, சண்முகம் குகதாசன், பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலை அதிபர்களாக கடமையாற்றிய முன்னாள் தற்போது கடமையிலுள்ள அதிபர்கள் 35ற்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.



## கல்குடா மிறாவோடை சக்தி வித்தியாலயத்துக்கு கதிரைகள் அன்பளிப்பு

(வாழைச்சேனை தினகரன் நிருபர்)



கல்குடா கல்வி வலயத்தில் அமைந்துள்ள மிறாவோடை சக்தி வித்தியாலயத்துக்கு அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற வாழைச்சேனையைச் சேர்ந்த பஞ்சாட்சரம் அமலன் ரூ.2 இலட்சம் பெறுமதியான கதிரைகளை அன்பளிப்பாக வழங்கிவைத்துள்ளார்.

இந்நிகழ்வில், பாடசாலை அதிபர் சா.சுதாகரன் மற்றும் நன்கொடையாளர் சார்பாக அவரது தாயார் திருமதி. பஞ்சாட்சரம், எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை வலய ஆசிரியர்களுக்கு ஆய்ந்தறி மதிப்பீடு தொடர்பான மீளாய்வு

(மணல்சேனை நிருபர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இறுதி பரீட்சை ஆய்ந்தறி மதிப்பீடு தொடர்பான மீளாய்வுக் கூட்டம் சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமாரின் வழிகாட்டலில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.பரமதயாளன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது 65 பாடசாலைகளில் தரம் 5 கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் இந்நிகழ்வில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம். அரபாத் முகைடீன் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.



## விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்துக்கு தெரிவு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் மாணவி ஒருவர் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது விஞ்ஞானப் பாட இணைப்பாளர் ஏ.எல். நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய இருமொழி கற்கைப்பிரிவில் தரம் 09 இல் கல்வி பயின்று வரும் எம்.ஐ. பாத்திமா இப்பத் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இவ்வெற்றிக்காக மாணவர்களை வழிப்படுத்திய பாடசாலை விஞ்ஞானப் பாட இணைப்பாளர், விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் வெற்றி பெற்ற மாணவி போன்றோருக்கு அதிபர் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் எதிர்வரும் சனிக்கிழமை மாணவி தேசிய மட்டப் போட்டிக்காக கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் குளத்து மீன்பிடி அதிகரிப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான வரட்சி காரணமாக குளங்கள் வற்றிவருவதால் மீன்பிடி அதிகரித்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குளங்களில் உற்பத்தியாகும் பனையான், குறட்டை, விரால், செத்தல், செல்வன் போன்ற மீனினங்கள் மீனவர்களின் வலைகளில் பெரிதும் பிடிக்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குளங்கள் வற்றி வருவதனால் குளத்தில் உற்பத்தியாகும் மீன்களை மிக இலகுவாக கரைகளில் இருந்தே பிடிக்கக்கூடியதாக விருப்பதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் விவசாய பிரதேசங்களான கொக்கட்டிச்சோலை, வாகரை, வவுணதீவு, வெல்லாவெளி உட்பட பல பிரதேச செயலகப்பிரிவுகளில் இவ்வாறு நன்னீர் மீன்பிடித்தொழில் அதிகரித்துவருகின்றது.

இதனால் பாதையோரங்களில் பயணிப்போருக்கு நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் மீன்களை விற்பனை செய்வதன் ஊடாக பெரும் இலாபத்தை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருப்பதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அரசடி பிள்ளையார் கனிஷ்ட பாடசாலையில் கற்றல் உபகரணக்கண்காட்சி

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு அரசடி பிள்ளையார் கனிஷ்ட பாடசாலையில் கற்றல் உபகரணக் கண்காட்சி பாடசாலை அதிபர் திருமதி ரீ.ஜெயந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கண்கவர் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டு ஆக்கங்களின் பொருள் விளக்கங்களும் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

மேலும் விஞ்ஞான விளக்கங்களுடன் கூடிய செயல் முறை விளக்கங்கள் சிறார்களினால் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியை அண்மையிலுள்ள பாடசாலை மாணவ



மாணவிகள் பார்வையிட்டு சென்றதுடன் பாடசாலையில் முதன்முறையாக இக்காண் காட்சி கூடம் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஆரம்ப கல்வி உதவி கல்வி பணிப்பாளர் ஏ.பிரகாஷ், முன்னால் பாடசாலை அதிபர் திருமதி சந்திரிக்கா செல்வநாயகம், பாடசாலை மேம்பாட்டு நிகழ்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ. நடேசானத்தராஜா, ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## மாமாங்கேஸ்வரர் தீர்த்தோற்சவம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற முறையே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்ட மகிமை மிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் ஆலய உற்சவத்தில் எதிர்வரும் 03 ஆம் திகதி சனிக்கிழமை ஆலயத்தின் சித்திர தேர் உற்சவமும், 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.தீராத நோய் எல்லாம் தீர்த்து வைக்கும் அற்புத தீர்த்தமாக மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தம் அமைந்துள்ளது. வழமையை விட இம்முறை அதிகளவான பக்தர்கள் வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களின் நலன் கருதி ஆலயத்துக்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.



# தலைவர் அஷ்ரஃப் அவர்களும் தவிசாளர் எச்.எம். பாரூக்கும்



# சவால்களும் சாதனைகளும்

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம். எச். அஷ்ரஃப் அவர்களுடைய அரசியல் தலைமைத்துவப் பண்புகளை அவருடன் நெருங்கி நேசமாகப் பழகிய எச். எம். பாரூக் அவர்கள் மூலமாக அறிந்து கொள்கின்ற அதேவேளையில் பாரூக் அவர்கள் பற்றிய அரசியல் பின்புலங்களையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. பாரூக் 1972 இல் கலகெதர ஜப்பார் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற தருணத்தில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுடன் ஓர் அறிமுகம் இருந்துள்ளதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாக அஷ்ரஃப் மற்றும் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்துடைய அரசியல் கால சூழல்களில் இருந்து வரும் வரலாற்றுக் கதைகளை கேட்பதற்கான ஆர்வமும் எதிர்பார்ப்பும் எமது நாட்டு மக்களிடையே இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது.

இது சேர் டி.பி. ஜாயா, சேர் ராசிக் பரீத், காலம் முதல் இன்று வரை இலங்கை வரலாற்றில் தடம் பதித்த பெரியார்களை தேடிப் படிக்கின்ற புதுமையான அறிவு சார் விடயமாக உள்ளது. அதிலும் அரசியல் சமூக விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இது மிக அத்தியாவசியமானது. பாரூக் அவர்களின் பின்புலத்தை ஆராய்ந்து வெளியே வெளிச்சத்திற்கு கொண்டு வரும் போது இவற்றை தெளிவாக கண்டு கொள்ளலாம்.

இலங்கையில் மிகவும் வீழ்ச்சி நிலையில் இருந்த முஸ்லிம்களுடைய கல்வி மேம்பாட்டுக்காக அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத், தம் சமூகத்தின் அவல நிலை அறிந்து அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் பிரசித்தி பெற்றன. இற்றைவரையிலும் பேசப்பட்டு வருகின்றன. இன்று பலராலும் சிலாகித்துப் பேசப்படும் அஷ்ரஃப் கூட கலாநிதி பதியுதீன் மஹ்மூத்துடைய அரசியல் சூழலில் இருந்து பலதைக் கற்றுக் கொண்டவர்தான். ஏ.சி. எஸ். ஹமீத், கலாநிதி பதியுதீன் மஹ்மூத், எம். எச். எம். அஷ்ரப் ஆகிய மூன்று தலைவர்களுக்கிடையே அரசியலில் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

அந்த வகையில் பாரூக்குடைய அரசியல் வாழ்க்கைப் பின்புலத்தில் அஷ்ரஃப் மற்றும் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆகியோர்களுடன் பழகிய சூழலை ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில் இலங்கை அரசியல் அரங்கில் முக்கிய இடத்தைப் பெறும் வாய்ப்பினைக் கொண்டுள்ளார் என்று குறிப்பிடலாம்.

ஆனாலும், பெரிய அரசியல் தலைவர்களை ஆராய்ந்தால் தான் நிறைய விடயங்களை அறிந்து கொள்ளலாம் என்பது அல்ல. அதற்காக காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. பெருந் தலைவர்களுடன் நெருங்கிப் பழகிய இரண்டாந் தர நிலையிலுள்ள அரசியல் பிரமுகர்களை ஆய்வு செய்தாலே அதற்குப் பொருத்தமான அவர்களுடைய ஆளுமையின் அடையாளங்களை நிறையக் கண்டு கொள்ளலாம். உண்மையில் பாரூக் போன்ற இரண்டாம் நிலையிலுள்ள அரசியல் பிரமுகர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் பெரிய அரசியல் தலைவர்களின் ஆளுமையின் அடையாளங்களை இலகுவாக அறிந்து கொள்ள முடியும். இன்று பாரூக்குடைய வரலாற்றுச் செய்திகள் உலக ஊடக அரங்கில் பேச ஆரம்பித்து விட்டன. இந்தப் போக்குடையவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களும் பேசப்பட வேண்டும். அதே நேரம் புதிய அரசியல் தலைமைத்துவங்கள், நமது அரசியல் கலாசார பண்பாட்டில், நமது மக்கள், நமது உரிமைகளில், நமது வாழ்வியலில், நமது முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் போன்ற விடயங்களில் காத்திரமான தன்மையுடனும் செயற்பட பாரூக்குடைய வரலாறு பயன்படும்.

பாரூக் அவர்களின் அரசியல், சமூக, கல்வி வாழ்க்கைப் பயணம் ஏறத்தாள 50 வருட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. இத்தனை ஆண்டு கால அரசியல், சமூக, கல்வி பாரம்பரியம், அந்த அனுபவம், அந்தப் படிப்பினைகள், தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. அவருக்கு அரசியல் சமூக, கல்வி தொடர்பான புரிதல்கள், நுட்பங்கள், அறிதல்கள் அவர் மத்தியில் இரத்தமும் சதையுமாகப் பரவியிருக்கின்றன. புதிதாக அந்த அரசியல் சமூகத் துறையில் நுழையும் போது அவர் சூனியத்திற்குள் இல்லை. அவரைச் சுற்றி அரசியல், சமூகம், கல்வி சார்ந்த விடயங்களுக்காக வழிகாட்டல்கள் நிரம்பியிருந்தன. அந்த அரசியல் சமூகப், கல்விப் பணிகளுக்குள் குதிப்பவர்கள் எவ்வாறோ இலகுவாக வழிகாட்டப்படுவர். அத்தகைய சூழல் அவருடைய சிறுபராயத்தில் அவரது ஊரிலே தந்தை வழியாக கிடைத்தன.

பாரூக்கின் அரசியல் பயண வரலாறு 50 ஆண்டு காலம் கொண்டது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 50 ஆண்டுகளுக்கு



முன்னர் தன் தந்தை சமூகப் பணிகளில் ஈடுபாடு காட்டிய அனுபவத்திற்கும் இன்று பேசப்படும் பாரூக்கின் அரசியல் அனுபவ முயற்சிகளுக்கும் நிறையச் சம்மந்தம் உண்டு என்பதுதான் யதார்த்தம். பாரூக்கின் அரசியல் செயற்பாடுகள் 1986 களின் தொடக்க காலத்தில் இருந்து ஆரம்பமாகின்றன. பாரூக்கின் தந்தை 1958 களில் சமூக சமயப் பணிகளில் ஈடுபட்ட அனுபவ முயற்சிகளின் தாக்கங்களே பாரூக் அவர்களிடம் காண முடிகின்றது. 'அவர் தந்தை சேர் ராசிப் பரீத் அவர்களை அழைத்து வந்து அக்குரணயில் மிகப் பிரமாண்டமான கூட்டத்தை நடத்திய சம்பவம் முக்கியத்துவம் பெறுகின்றது. அது மட்டுமன்றி அதன் போது தலதா மாளிகையின் தியவதன நிலமே, மாவட்ட அதிபர், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் சமுகமளித்த விடயத்தின் தாக்கம் இயல்பாகவே தோன்றியது. ஒரு அரசியல் செயற்பாட்டுத் துறையாகவே அல்லது தனித்துவமான சமூகச் செயற்பாட்டுத் துறையாகவே அவை வளர்த்தெடுக்கப்பட வில்லை. அரசியல் துறைக்கான உட்கட்டுமானங்கள் எதுவும் கட்டியமைக்கப்படவும் இல்லை. ஒரு சமூக அசைவியக்கமாகவும் அது முன்னெடுக்கப்பட வில்லை.

இந்நிலையில்தான் அஷ்ரஃபினதும் நட்பும் சூழலினதும் உந்துதலினால், இலங்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதயமும் பலர் அரசியலில் மிகுந்த ஆர்வத்தோடு களமிறங்க வெளிக்கிட்டார்கள். அந்த அரசியல் துறை ஆர்வலர்களுக்குக் கைகொடுத்து ஊக்குவித்தவர் அல்லது தத்தெடுத்துக் கொண்டவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் அஷ்ரஃப் ஆவர். அந்தச் சூழலில் அஷ்ரஃப்புக்கு பக்கபலமாகச் செயற்பட்டு பிரபல்யமாகத் திகழ்ந்தவர் அக்கட்சியின் தவிசாளர் எச். எம். பாரூக்கும் கூட. அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்கள் தந்தை பெரிய சமூக சமயப் பணி–களில் ஈடுபாட்டைக் கொண்டவர். அவர் பற்றி கூற முடியுமா?**

எனது தந்தையின் பெயர் ஈ. எச். முஹமட். அவர் ரம்புக்கனை என்ற ஊரில் பிறந்து கல்ஹின்னையில் திருமணம் முடித்தவர். அடப்பேலாகெதர என்ற மிகவும் முக்கியமான பெயர் கொண்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். வியாபாரியாக தன்னுடைய வாழ்க்கையை தொடங்கி, பெரிய சமூக சேவையாளராக மாறினார்.

1958 காலப்பகுதிகளில் அங்கும்புர என்ற இடத்தில் சிங்கள மக்கள் 95 விகிதம் வாழ்ந்த ஊரில் அவர் வியாபாரம் செய்தார். அப்பொழுது அங்கும்புர பள்ளியின் நிர்வாக சபைத் தலைவராக இருந்தார். கல்ஹின்னை, ரம்புக்கல, அங்கும்புர ஆகிய பகுதிகளிலுள்ள சிங்கள மக்களை ஒன்று சேர்த்து தேசிய மீலாத் தின விழாவை நடத்தினார். அந்த மீலாத் விழாவுக்குப் பிரதம அதிதியாக சேர் ராசிக் பரீத்தை அழைத்தார். அப்பொழுது சேர் ராசிக் பரீத் கெபினட் அமைச்சராக இருந்தார். அந்த நிகழ்வில் அந்தக் காலத்தில் இருந்து தனவந்தராகக் காணப்பட்ட மாத்தளை மீஸான் முஹிடீன் ஹாஜியாரும் கலந்து கொண்டார். மீஸான் முஹிடீன் ஹாஜியார் எனது தந்தையும் ஒன்று விட்ட சகோதரர்கள். இக் கூட்டத்திற்கு 1000 க்கும் மேற்பட்ட பெரு எண்ணிக்கையிலான சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர். இதில் விசேட அதிதியாக கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே, கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் கலந்து கொண்டனர். பெரும்பான்மையின மக்கள் வாழ்ந்த இடத்தில் இந்நாட்டின் முக்கியமான அமைச்சர், பிரமுகர்களை அழைத்து இன ஒருமைப்பாட்டுக்கான விழாவை எனது தந்தை நடத்தினார்,

இதில் விசேடமாக கல்ஹின்னையில் உள்ள எல்லா மக்களும் ஒற்றுமையுடன் கலந்து கொண்டார்கள். இந்த மீலாத் விழா கல்ஹின்னையை ஒற்றுமைப்படுத்தி விழா என்று இன்று விதந்து பேசுபவர்கள் உள்ளார்கள். எமது ஊரின் பிரபல்யமான தொழிலதிபரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை ஆலோசகர் சபை உறுப்பினருமான முஸ்லிம் சலாஹுதீன் அன்று நடைபெற்ற அந்த மீலாத் விழாவின் சிறப்புப் படங்கள் கல்ஹின்னையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வீடுகளிலும் இருத்தல் வேண்டும் என்பார். அந்தவகையில் அந்த மீலாத் விழா ஊரின் ஒற்றுமைக்காக பறைசாற்றிய விழாவாகும். சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இன நல்லுறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் விழா என்று இன்னும் நினைவுபடுத்துவோர்கள் உள்ளார்கள். இது எனது தந்தையின் சேவையைப் பெருமைப்படுத்துகிறது.

**நீங்கள் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்துடன் நேசம் வைத்துப் பழகுவதற்கு முன்னர் அவரு–டைய தொடர்பு ஆரம்ப காலத்தில் எவ்வாறு ஏற்–பட்டது என்று கூறுவீர்களா?**

1972-1977 களில் நான் கலகெதர ஜப்பார் மஹா வித்தியாலயத்தில் அதிபராக இருந்தேன். அங்கு ஐந்து வருடம் அதிபராகக் கடமையாற்றினேன். அப்பொழுது தற்போதைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கலதெகர ஜப்பார் மகா வித்தியாலத்தில் கல்வி கற்றார். அவர் நவோதய புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு ரோயல் கல்லூரியில் இணைந்து கொண்டார். ஹக்கீமுடைய தந்தையாரும், எனது மனைவி றஸீமாவின் தாயும் கூடப் பிறந்த சகோதரர்கள். இது ஒரு முக்கியமான விடயம். அங்கு அப்பாடசாலையின் மேம்பாட்டுக்காக உழைத்து வந்தேன்.

ஒரு தடவை பாடசாலையின் தேவையை நிறைவேற்றுவதற்காக கலகெதர தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தமரா குமாரி இலங்க ரத்தனவைச் சந்தித்தேன். ஒரு யுக்தியைக் கையாண்டு எனது பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பெற்றோர்கள் எல்லோரும் உங்களைச் சந்திக்க வருகை தருவார்கள் என்றேன். அவர் அப்பொழுது எதற்காக என்று வினவினார். ஏனென்றால் பாடசாலையின் தேவைகள் எவையும் நிறைவேற்றித் தராமல் இருப்பதால் அவற்றை முறைப்பாடு செய்வதற்காக வருவார்கள் என்றேன். அப்பொழுது அவர் உடனே அவர்களை வர வேண்டாம் என்று சொல்லுங்கள். நான் அதனைப் பார்த்துக் கொள்கின்றேன் என்றார். உடனே எனக்கு முன்னால், அன்று கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அதன் போது அவர் ஜப்பார் மகா வித்தியாலத்தின் தேவையான விடயங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கோரிக்கை விடுத்தார். அதன் பின்பு கலாநிதி பதியுதீன் மஹ்மூத்தை நேரில் சென்று சந்தித்தேன்.



அப்பொழுது அவர் இந்த தொலைபேசி அழைப்பு அவரிடமிருந்து வரும்வரை மட்டும் தான் நான் காத்திருந்தேன் என்றார்.

ஏனென்றால், அந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் சான்றுகள் இல்லாமல் தனக்கு எந்தவொரு வேலையும் செய்ய முடியாது என்றார். அவர் உடனே 100X20 கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்தார். பாடசாலையில் மனையியல் விஞ்ஞானப் பிரிவுக்கான கட்டடத்தை வழங்கினார். மறுநாள் கல்வி



அமைச்சின் செயலாளரை அனுப்பி வைத்தார். அவர் பாடசாலைக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிக் கொண்டு சென்றார். அதன் பிறகு இன்னும் பாடசாலை வேலைகளுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாக்களை ஒதுக்கீடு செய்து தந்தார். கலகெதரை மக்களின் மனதில் வாழும் ஓர் அதிபராக இன்னும் மதிக்கப்பட்டு வருகின்றேன்.

எப்படி ஒரு வேலையை பாடசாலை முன்னேற்றத்திற்கு கையாள வேண்டும் என்ற யுக்தியை இந்த செயற்பாடு அமையும் எனக் கருதுகின்றேன்.

தற்போது கண்டியில் அமைந்துள்ள பதியுதீன் மஹ்மூத் கல்லூரி அந்த இடத்தில் அமைந்து இருக்கவில்லை. அந்த இடத்தில் அமைந்திருந்தது தொழில் நுட்பக் கல்லூரியாகும். அப்பொழுது கண்டி லைன் பள்ளிவாசலுக்கு மேல் ஒரு சிறிய முஸ்லிம் பாடசாலை இருந்தது. அங்கு அருகிலுள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளை ஒன்று சேர்த்து கண்டியில் ஒரு பெண்கள் பாடசாலை உருவாக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. அந்த வகையில் தற்போது கல்விப் பணிமனையாக விளங்குகின்ற இடத்திற்கு மாற்றம் செய்யும்படி கோரிக்கை விடுத்தார். அதன் பின்னர் லைன் பள்ளியில் இருந்த பாடசாலைப் பிள்ளைகளையும் ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்ற பிள்ளைகளையும் ஒன்று சேர்த்து பெண்கள் பாடசாலையை கண்டியில் ஆரம்பித்தார். இதற்கு வழக்கம் போன்று பாரிய எதிர்ப்புக்கள் எழுந்தன. அச்சந்தர்ப்பத்தில் அப்பாடசாலையைப் பார்வையிடுவதற்காகச் சென்றேன். அங்குள்ள பொருட்களை எல்லாம் ஏற்றிச் செல்வதையும் அங்கு பொருத்தியிருந்த மின் விசிறிகளையும் கலட்டுவதையும் அவதானித்தேன். இது தொடர்பில் உடனே கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு முறைப்பாடு தெரிவித்தேன். அவர் தொலைபேசியில் அறிவுறுத்தல் விடுத்திருந்தார். அதாவது 'நான் இன்று 3.00 மணிக்கு வருவேன். அவ்வளவு பொருட்களும், மின்விசிறிகளும் இருந்திருந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுத்திருந்தார். எடுத்து சென்றதை மீளவும் கொண்டு வந்து வைத்ததும், மின்விசிறிகளை மீளப் பொருத்திய காட்சிகளை நான் கண்ணால் காணக் கூடியதாக இருந்தன. அதன் பிறகு அப்பாடசாலையின் வளர்ச்சிக்கான பல பங்களிப்புக்களை அவர் ஊடாகச் செய்துள்ளேன். அப்பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாக்கள் போன்ற பல நிகழ்வுகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

1970-1972 களில் மடவளை மதீனா பாடசாலையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினேன். அதன் பின்னர்தான் கலகெதரைப் பாடசாலைக்கு அதிபராக நியமனம் செய்யப்பட்டு வந்தேன். என்னைப் பற்றி அறிந்து கொண்டதுடன் கலகெதரை கல்விப் பணிப்பாளர் எனக்கு அழைப்பு விடுத்தார். அங்கு சென்ற போது அவர் என்னை அதிபராக நியமனம் செய்யவுள்ளேன் என்றார். அப்பொழுது அதற்கு நான் எனக்கு 27 வயது என்றேன். அதற்குப் பணிப்பாளர் கூறுகையில் தகுதியான அதிபர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தேன். பலர் உங்களுடைய தகுதியைப் பற்றியும் நன்கு ஈடுபாடுடையவர் என்று கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் இயலாது என்கிறீர்கள். அப்ப நான் என்ன செய்வது என்றார். இதன் பின்னர் கடமையைப் பொறுப்பேற்கின்றேன் என்றேன். அங்கு சென்று சிறிய குடிசையில் வாழ்ந்து கொண்டு தான் பாடசாலையை கட்டியெழுப்பினேன். அதில் எனது மனைவியின் தாயாரின் தந்தை தலைமையாசிரியராகக் கடமையாற்றிய அந்த இடத்தில்தான் நாங்கள் குடும்பத்தோடு வசித்தோம். அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இரவும் பகலும் பாடுபட்டு உழைத்தேன்.

அந்த வகையில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்வி மறுமலர்ச்சிக்காக பாடுபட்ட போது அவருடன் சேர்ந்து பழகிய காலத்தில் அவர் கல்வியின் மேலெழுச்சிக்காக ஆற்றிய மனத் திருப்தியையும், மன ஆற்றலையும் தரும் விடயங்களையும் அவர் வாயிலாகவும் நான் கற்றுக் கொள்ளக் கிடைத்தது என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். எனது எண்ணங்களில் கல்வி, சமூக உணர்வுகளும் மற்றவர்களின் தேவை எவையென அறிந்து உணர்ந்து செயல் வடிவம் பெறுவதற்கு இதன் ஆக்கபூர்வமான உண்மைத் தன்மைகளை வெளிப்படுத்துவதற்கும் ஆசான்களாக எனது தந்தை, அஷ்ரஃப், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆகியோர் பின்புலமாக இருந்துள்ளார்கள் என்று கூறுவதில் அது மிகையல்ல.

முன்னோடி அரசியல்வாதிகளான விளங்கும் எம்.எச்.எம். அஷ்ரஃப், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் மற்றும் எனது தந்தையின் வழிகாட்டலுடன் தன் அரசியல், கல்வி, சமூகப் பணியை அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளேன்.

**நேர்காணல்: இக்பால் அலி**

## ஹப்புத்தளை - பெரகலைக்கிடையிலான வனப்பிரதேசம் தீக்கிரை; மக்கள் கவலை



*ஊவா சுழற்சி நிருபர்*

ஹப்புத்தளைக்கும் பெரகலைக்கும் இடையிலான வனப்பிரதேசம் தீக்கிரையாகிய சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு - பதுளை வீதியில் மிகவும் அழகானதும் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகவும் காணப்படும் ஹப்புத்தளைக்கும் பெரகலைக்கும் இடையிலான வனப்பிரதேசம் ஆங்காங்கே இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டதை தம்மால் காண முடிவதாக தெரிவித்துள்ள அம்மக்கள், இந்த வனப்பிரதேசத்துக்கு தீ வைப்பது பழக்கமாகி விட்டதாகவும் கூறியுள்ளனர். இருப்பினும் இது போன்ற செயல்களை செய்பவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்குவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற சம்பவம் இடம்பெறுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆண்டு தோறும் ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் வனத்துறை அதிகாரிகள் இவ்வனப்பிரதேசத்தில் கவனம் செலுத்தும் பட்சத்தில் இந்த பொன்னான அழகிய சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியுமெனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.



கண்டி, மடவளை பஸார் ஹில்கன்றி பாடசாலையின் 2023ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா அப்பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஏ.எம்.ஜாசில் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (படம்: அக்குறணை குறூப் நிருபர்)

## மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது வருட பூர்த்தி

### ஞாபகார்த்த முத்திரை வெளியிட ஏற்பாடு

*புசல்லாவை தினகரன் நிருபர்*

மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது வருட பூர்த்தியையிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மலையக கலாசார ஒன்றியத் தலைவர் கே.ஜே.சிவராஜேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. சமூக செயற்பாட்டாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகனின் அனுசரணையில் மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் சமூக செயற்பாட்டாளர் கௌரவிப்பு நிகழ்வும் இதன்போது நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிறப்பு சான்றிதழ்கள் பெற்றுக்கொடுப்பு

*தலவாக்கலை குறூப் நிருபர்*

தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத நிலையில் அவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இம்மாணவர்களுக்கு ட பீல்ட் நிறுவனத்தின் உதவியுடன் பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

# வடக்கின் உதயம்

# இணையத்தளம் ஊடாக வியாபார பதிவை ஆரம்பிக்க துரித நடவடிக்கை

## வடமாகாண ஆளுநர்

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**



இணையத்தளத்தினூடாக வியாபார பதிவுகளை (Online Business Registration) ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் ஆளுநரின் தலைமையில் ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எம்.பிரதீபன், ஆளுநரின் உதவி செயலாளர், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் மற்றும் யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு வியாபார பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையத்தள பதிவு முறையை (Online Business Registration) அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடு என தெரிவித்துள்ள ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டை துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் பொதுச் சேவைக்கான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதும் அவசியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசேட தேவையுடையோர், பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுவதன் அவசியம் தொடர்பாகவும் அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், போக்குவரத்துக்கான பஸ்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக கூறியுள்ளார்.

அத்துடன் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு இதன்போது கொண்டு செல்லப்பட்டது.

அதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தான தேர் திருவிழா



யாழ்ப்பாணம், சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த தேர் திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு வேட்டை திருவிழா நடைபெறும். நாளை வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு சப்பர திருவிழா நடைபெறவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்த திருவிழா நடைபெறவுள்ளதுடன், மறுநாள் 5ஆம் திகதி திங்கட்கிழமை வைரவர் பொங்கல் நடைபெறவுள்ளதாக, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# 15 மாடுகளை கடத்திய மூன்று பேர் கைது

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்திலிருந்து திருகோணமலை நோக்கி கப் ரக வாகனத்தில் கடத்திக்கொண்டு செல்லப்பட்ட 15 மாடுகளுடன் 3 சந்தேக நபர்கள் வவுனியா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமாக பயணித்த வாகனத்தை வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதி 6ஆம் கட்டை பகுதியில் வழிமறித்து விசேட அதிரடிப்படையினர் சோதனை நடத்தினர்.

இதன்போது இந்த வாகனத்தில் முறையான அனுமதி ஏதுமின்றி கொண்டு செல்லப்பட்ட 15 மாடுகளை வாகனத்துடன் இவர்கள் மீட்டுள்ளதுடன், வாகனத்தில் பயணம் செய்த மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் விசாரணையின் பின்னர் வவுனியா பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 'அன்புள்ள' திரைப்பட அறிமுக விழா இன்று




**யாழ். விசேட நிருபர்**

ஈழத்து சினிமா படைப்பாக உருவாகியிருக்கும் 'அன்புள்ள', 'பறவாதி' ஆகிய இரண்டு முழுநீள திரைப்படங்கள் விரைவில் வெளிவரவுள்ளன. இந்நிலையில் கருடன் தயாரிப்பு நிறுவனம் வழங்கும் 'அன்புள்ள' திரைப்படத்தின் அறிமுக விழா மற்றும் பழங்குடி மக்களின் வாழ்வியல் சார்ந்த 'பறவாதி' திரைப்பட முன்னோட்ட காட்சி வெளியீட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

'அன்புள்ள' திரைப்படமானது கதிரின் எழுத்து, இயக்கத்திலும் 'பறவாதி' திரைப்படமானது அஜந்தனின் எழுத்து, இயக்கத்திலும் அமைந்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது முன்னோட்ட காட்சி வெளியீடு தொடர்பான அறிவிப்பை படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் வர்த்தக சினிமாவாக முன்கொண்டு செல்வதும் படைப்பாளர்கள் தமது பணியை முன்னெடுக்கும் போது எவ்வித தடையுமின்றி புதிய பாதையில் சர்வதேச படைப்பாளர்களுடன் ஈழத்து படைப்புகளை இணைப்பதும் நோக்கம் என கருடன் தயாரிப்பு நிறுவன பணிப்பாளர் எல்றோய் அமலதாஸ் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் மாபெரும் இரத்ததான முகாம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மாபெரும் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2.00 மணிவரை மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய நிலையத்தில் நடைபெறும். மன்னார் மறை மாவட்டத்தில் பல்வேறு மனிதநேய பணிகளை மேற்கொண்டு வரும் கறிற்றாஸ் வாழ்வுதயமே இந்த இரத்ததான முகாமை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவினர் இணைந்து முன்னெடுக்கவுள்ள இந்த இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்ய விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து இந்த உயிர் காக்கும் உன்னத பணிக்கு பங்களிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யுக்திய சுற்றிவளைப்பில் 12 சந்தேக நபர்கள் கைது

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தின் கரவெட்டி, கரணவாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் 12 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய சுற்றிவளைப்பின் ஒரு கட்டமாக நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரணவாய் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேரும் 450 மில்லிலீற்றர் கசிப்பை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவருமாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மன்னாரில் 'பயணிக்கும் வரலாற்று' அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை

**மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்**

வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்துகொள்ளும் வகையில் 'எமது காலம்' எனும் கருப்பொருளின் கீழ் 'பயணிக்கும் வரலாற்று' அருங்காட்சியகம் மன்னாரில் அமைக்கப்படவுள்ளதுடன், எதிர்கால தலைமுறையினர் தெரிந்துகொள்ளும் வகையில் ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கான செயற்றிட்ட நடவடிக்கை கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் SCOPE அமைப்பின் திட்ட ஆலோசகர் சுஜான் நாணயக்கார, தேசிய பணிப்பாளர் நவாஸ் முகமட், மேற்படி அமைப்பின் வரலாற்று கருத்தாடல் ஆலோசகர் தர்ஷிகா கதிர்வேல், திட்ட ஒருங்கிணைப்பாளர் முகமட் சுஹைல், திட்ட ஒருங்கிணைப்பாளர் தரிந்த மல்லவராச்சி, திட்ட முகாமையாளர் சௌமியா அமரசிங்க மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உள்ளடங்கலாக அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மன்னார் நகரில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியக செயற்பாடுகள் 8 நாட்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாட்டு திட்டம் மற்றும் மன்னார் மாவட்டம் தொடர்பான வரலாறு, மன்னார் மாவட்ட எல்லைகள், மன்னார் மாவட்டத்தின் சிறப்பு,



சமயம், கலாசாரம், பண்பாடு, கலை, இன்னும் பல்வேறு வரலாற்று சிறப்பு தொடர்பான ஆய்வுகள், தரவுகள் உள்ளிட்ட விடயங்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆக்கபூர்வமாக கலந்துரையாடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரைகாலமும் வரலாற்று ரீதியான பதிவுகள் அறியப்படாத நிலையில் இந்த நிகழ்வின் ஊடாக மக்கள் பயன் பெறும் விதத்தில் குறிப்பாக மாணவர்கள் இலகுவாக அறிந்துகொள்ளும் விதத்தில் பயணிக்கும் அருங்காட்சியக செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக தமிழில் தமது கருத்துகளை, ஆவணப்படுத்தல்களை முன்வைக்கும்படியும் வளவாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பயணிக்கும் அருங்காட்சியக திட்டத்தின் ஊடாக பல்வேறு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்

# மட்டுப்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



இனிவரும் நாட்களில் குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் நேர ஒழுங்குக்கு அமையவும் மேற்கொள்ளப்படும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நிலவி வருவதன் காரணமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கிளிநொச்சியின் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் அதிகாலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்திலும் நீர் விநியோகம் காணப்படுவதால் பொதுமக்கள் நீரை சிக்கனமாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், குடிநீரை சேமித்து வைத்து பயன்படுத்துமாறும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது கிளிநொச்சியில் நிலவுகின்ற வெப்பமான காலநிலை காரணமாக பொது மக்களின் நீர் பாவனை வழமைக்கு மாறாக அதிகமாக உள்ளது. அதாவது கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட பொது மக்களின் நீர் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# தமிழக கடற்றொழிலாளர் மூவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை

## ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பு

**யாழ். விசேட நிருபர்**



இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக கடற்றொழிலாளர்கள் 3 பேருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

அத்துடன் 3 படகுகளின் உரிமையாளர்கள் 3 பேருக்கு தலா 4 மில்லியன் ரூபாபடி அபராதத்தை நீதிமன்றம் விதித்தது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் மீதான வழக்கு விசாரணை நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட போதே, இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது கடந்த ஜூன் மாதம் 16ஆம், 22ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்ட 26 பேரில் 3 பேர் இரண்டாவது தடவையாக மீண்டும் கைது செய்யப்பட்டமையால் இவர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஏனைய 23 பேரில் 3 படகுகளின் உரிமையாளர்கள் இருந்தமையால் இவர்கள் மூவருக்கும் தலா 4 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அபராாதத்தை செலுத்தத் தவறின் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் 3 படகுகளும் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்று உத்தரவிட்டது. அத்துடன் குறித்த 23 பேருக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட 25 கடற்றொழிலாளர்களை எதிர்வரும் 6ஆம் திகதிவரையும் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட 13 கடற்றொழிலாளர்களை 8ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

# 60 வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு தாக்கல்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 30ஆம் திகதிவரை வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது சரியான தராசு பயன்படுத்தாமை, விலை அழிக்கப்பட்டமை, விலை குறிக்கப்படாமை, காலாவதியான பொருட்களை வைத்திருந்தமை, தகவல் குறிக்கப்படாமை, உத்தரவாதம் வழங்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 54 வழக்குகளும் பேக்கரி தொடர்பில் 6 வழக்குகளுமாக 60 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரம், கோவில்குளம், வைரவபுளியங்குளம், குருமன்காடு, பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளுக்குளம் உள்ளிட்ட பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# தேசிய மட்டத்துக்கு 21 மாணவர்கள் தெரிவு

**தலைமன்னார் விசேட நிருபர்**

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்ளேனத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட ஒற்றையர் சதுரங்க போட்டியில் மன்னார் மாவட்டத்தில் 21 மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவர் ஒருவர் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்மேளனத்தால் கிளிநொச்சியில் மாகாண மட்ட ஒற்றையர் சதுரங்க போட்டி நடத்தப்பட்டது. இதன்போது மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி மாணவரும் நானாட்டனை சேர்ந்த அன்ரனி யோண்சன் கிர்ஷான் என்ற மாணவரும் 20 வயதுக்கு கீழ்ப்பட்ட பிரிவில் முதலாம் இடங்களை பெற்றுள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் மத சகவாழ்வு செயலமர்வு



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னாரில் தேசிய சமாதான பேரவையால் முன்னெடுக்கப்பட்டு வரும் மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் வன்முறைகளை தடுப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு மன்னாரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஒழுங்கமைப்பில் மாவட்ட ரீதியாக இயங்கி வரும் சர்வ சமய குழுவினர் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் தேசிய சமாதான பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்டு இச்செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்த செயலமர்வில் மத குருமார்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஹெரோயினுடன் இரு சந்தேக நபர்கள் கைது



மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாபே பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்கள் இருவர் அப்போதைப்பொருளுடன் பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் போதைப் பொருள்வைத்திருந்தமைதொடர்பாக மாவத்தகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 8 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மாத்தளையை சேர்ந்தவர்கள் என்பதுடன், 29 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உள்நாட்டு துப்பாக்கிகளுடன் கஹவத்தவில் ஒருவர் கைது

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆறு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கஹவத்த பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆறு துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கி மருந்து 485 கிராம் உள்ளிட்டவற்றுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் எலபான பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். இரத்தினபுரி, உடனிறிஎல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடையவர் ஆவார். இந்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கத்தி குத்தில் இளைஞர் படுகாயம்

நாகர்கோவில் விசேட நிருபர்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சந்தை மேற்கு ஒழுங்கையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற கத்திக் குத்து சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 26 வயதுடைய சீனிவாசன் கிருபாகரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

கத்திக் குத்துக்கு உள்ளான இளைஞர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# குளவி கொட்டியதில் நால்வர் பாதிப்பு

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியாவில் நான்கு பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்று மாலை சாமிமலை கவரவில்லை தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றது.

இந்நிலையில் தேயிலை செடியின் வேர் பகுதியில் இருந்த குளவிகள் கலைந்து வந்து தம்மை கொட்டியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஊவா மாகாண சுற்றுலா தின விசேட ஊக்குவிப்பு நிகழ்வுகள்

ஊவா சுழற்சி நிருபர்




உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு 'பயணமும் சமாதானமும்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஊவா மாகாண சுற்றுலா தின விசேட ஊக்குவிப்பு நிகழ்வுகள் ஹப்புத்தளை சுற்றுலா பிரதேசத்தை மையப்படுத்தி மூன்று நாட்களாக நடைபெறுகின்றன.

ஊவா மாகாண சபையின் சுற்றுலா அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பயணமும் சமாதானமும்' ஊக்குவிப்பு நிகழ்வை ஹப்புத்தளை மாநகர சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஹோட்டல்துறை சார்ந்தோர் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

நடைபவனி, நடனம், கருத்தரங்கு, உணவு பரிமாற்றம், உணவு தயாரிப்பு என பல நிகழ்வுகள் இதன்போது நடைபெற்றன.

இதன்போது நகரிலுள்ள ரயில் நிலையம், கோயில்கள் மற்றும் ஏனைய தேயிலை தோட்டங்களை மையமாகக் கொண்டு இப்பிரதேசத்தின் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை அதிகரிக்கும் நோக்குடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை மையப்படுத்தி இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

# சுற்றுமதில் நிர்மாண வேலை முன்னெடுப்பு

மாத்தளை சுழற்சி நிருபர்



கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அக்குரனை தெலும்புகஹவத்த முஸ்லிம் வித்தியாலயத்துக்கான சுற்று மதில் நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 10 இலட்சம் ரூபா செலவில் இந்த சுற்று மதில் நிர்மாணப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குரனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் கலந்து கொண்டதுடன், சுற்று மதில் நிர்மாணத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அம்பாறை மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கல்முனை றோட்டரிக் கழகத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.
(படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# இலங்கையில் விவாகரத்துகள் அதிகரிப்பு

## அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

இலங்கையில் ஒரு நாளைக்கு 400க்கும் மேற்பட்ட விவாகரத்து இடம்பெறுவதாக அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் மனூஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இளைஞர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர்களை இலக்காக கொண்டு நடாத்திய 'மனித மனதை புரிந்து கொள்வோம்' எனும் தலைப்பிலான இலவச உளவியல் செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் மனூஸ் அபூபக்கர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சமகாலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் ஸ்திரமற்ற தன்மை, குடும்ப மற்றும் சமூக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக நிறைய உள சமூக பிரச்சினைகள் ஏற்படுகின்றன.



இதனை சீர் செய்யவதற்கு ஒவ்வொரு வரும் மனது தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் மற்றவர்களின் நடத்தைகளை புரிந்து கொள்ள முடியும். உள்ளம் தொடர்பாக அறிந் திருத்தல் இன்றைய காலப்பகுதியில் அத்தியாவசியமான ஒன்றாகும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் உளப் பாதிப்பின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது, உள சமூக பிரச்சினைகளுக்கான தலையீடு இன்றி அமையாது. சமூக நிறுவனங்களைத் தாண்டி ஒவ்வொரு குடும்ப அலகிற்கும் ஒவ்வொரு ஆற்றுப்படுத்துனர் தேவை.

உள்ளம் தொடர்பான கற்கை நெறியினை கற்பது அவசியம், பொது நிர்வாக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தொலைதூர கற்கைகள் நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்ற ஒருவருட உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி எமது கிழக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

இதனூடாக இப்பிராந்தியத்தின் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் பிரயோசனமடைய வேண்டும் என்றார்.

# மாணவர்களுக்கான செயலமர்வு

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

கல்முனை வலயப் பாடசாலைகளில் வர்த்தகமும் கணக்கியல் பாட அடைவு மட்டத்தை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆசிரிய ஆலோசகர் .ரி.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

கடைசியாக வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளில் சிறந்த பெறுபேறு கிடைத்ததாகவும் அதனை நூறு வீதமாக்க பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று வெளிவரவுள்ள கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றிலும் சிறந்த பெறுபேற்றை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சிகள் தனிப்பட்ட கோட்ட மட்ட வெளிவாரி தரிசிப்பிலும் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

# திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையேற்று ஒருவருட பூர்த்தி



(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அரசாங்க அதிபராக கடமையை பொறுப்பேற்று ஒரு வருட கால பூர்த்தியை முன்னிட்டு 'உங்களுடன் ஒரு வருடம்' என்ற தலைப்பின் கீழ் மாவட்ட செயலகத்திலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்குமான விசேட கூட்டம் (29) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடமைகளுக்கிடையே செய்யப்பட்டும் சிறப்பு விடயங்கள், மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகள், ஒன்றிணைந்து வேலை செய்யும் வாய்ப்பு, அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள், உண்மையான நிலைமை, மிக முக்கியமாக மத்தியஸ்தம், உந்துதல், தியானம், இடம்பெயர்வு போன்ற பல விடயங்கள் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரினால் எடுத்து கூறப்பட்டன.இதன்போது மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று ஹற்றன் நெஷனல் வங்கியில் இஸ்லாமிய பிரிவு திறப்பு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



அக்கரைப்பற்று ஹற்றன் நெசனல் வங்கி கிளையில் இஸ்லாமிய பிரிவு கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்கிலங்கையின் மூன்றாவது தடவையாக வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது

அக்கரைப்பற்று கிளை முகாமையாளர் ஏ .எஸ். ரியாசுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹற்றன் நெஷனல் வங்கியின் இஸ்லாமிய வங்கிப்பிரிவின் தலைவர் பிரதி பொது முகாமையாளர் ஹிஷாம் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய வங்கிப்பிரிவை திறந்து வைத்து முதல் வைப்பு பணத்தையும் ஏற்றுக் கொண்டார். அன்னாரின் உரையையடுத்து "சரீஆ" வங்கியின் ஆலோசகர் ஷேய்க் இஷாப் மசூத் (ஹக்கானி) ஒரு விரிவான தெளிவுரையையும் ஓர் இஸ்லாமிய வங்கியில் ''ஹராம்'', 'ஹலால்" போன்றவைகளை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கிழக்குப்பிராந்திய கணிப்பொறி வியாபாரப் பிரிவின் உதவி பிராந்திய முகாமையாளர் சம்பிக்க வீரகோன் கிழக்கு மாகாண கனணி வியாபாரப்பிரிவின் தலைவர் ஏய். எஸ். சத்தியசீலன், பிராந்திய அறவீடுகள் முகாமையாளர் ஏ.எல்.சிராஜ் அகமத் மற்றும் . ஹற்றன் நெசனல் வங்கி உயர் அதிகாரிகளும் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த முகாமையாளர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் முன்னணி வாடிக்கையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மாணவி மின்மினி மின்ஹாவிற்கு கல்முனையில் கௌரவம்

(மாளிகைகாடு குறூப் நிருபர்)



தேசிய ரீதியில் பசுமை மீட்சி பயணம் என்ற நோக்குடன் 10 இலட்சம் மரங்களை நடுவதற்கு உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்று தேசிய ரீதியாக தனது செயற்பாடுகள முன்னெடுத்துச் செல்லும் பாடசாலை மாணவி மின்மினி மின்ஹாவின் செயற்பாடுகளை கௌரவித்து கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயத்துடன் இணைந்து கல்முனை பிர்லியன்ட் விளையாட்டு கழகம் நடாத்திய விஷேட நிகழ்வில் மாணவிக்கு 'பிரிலியன்ட் சிறுவர் விருது' ("Brilliant Child Award") விருது வழங்கி கௌரவித்தது.

| Procurement of Multipara Monitor with Capnography | EP/21/PU/LM/MMC/AM/2024 | Multipara Monitor with Capnography | 09 | 720,000.00 | 119 days from bid opening | 91 days from bid opening | 12,500.00 |
| Procurement of Portable Ventilator | EP/21/PU/LM/PV/AM/2024 | Portable Ventilator | 01 | 140,000.00 | 105 days from bid opening | 77 days from bid opening | 3,500.00 |
| Procurement of Ventilator (Invasive) | EP/21/PU/LM/VEN/AM/2024 | Ventilator | 01 | 140,000.00 | 105 days from bid opening | 77 days from bid opening | 3,500.00 |
| Procurement of Fully Auto Urine Analyzer | EP/21/PU/LM/AUA/AM/2024 | Fully Auto Urine Analyzer | 01 | 80,000.00 | 91 days from bid opening | 63 days from bid opening | 3,500.00 |
| Procurement of Blood Warmer | EP/21/PU/LM/BW/AM/2024 | Blood Warmer | 02 | 48,000.00 | 91 days from bid opening | 63 days from bid opening | 3,500.00 |
| Procurement of Body Warmer | EP/21/PU/LM/Body Warm/AM/2024 | Body Warmer | 01 | 24,000.00 | 77 days from bid opening | 49 days from bid opening | 1,000.00 |
| Procurement of ICE Line Refrigerator | EP/21/PU/LM/REG/AM/2024 | ICE Line Refrigerator | 02 | 36,000.00 | 77 days from bid opening | 49 days from bid opening | 1,000.00 |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. 2024.08.01 ஆம் திகதியிலிருந்து 2024.08.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலக கணக்கிடல் கிளையில் மேற்கொள்ளப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் வியாபார பதிவுச் சான்றிதழுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலத்திலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று சுகாதார சேவைகள் மாகாண திணைக்கள கணக்கியல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம்.
3. ஒவ்வொரு விலைமனுவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையிலுள்ள வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் அல்லது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் மாகாண திணைக்கள கணக்கிடல் கிளைக்கு எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 3 மணிக்கு முன்னராக ரொக்கப் பணத்தில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணைமுறி, பிணைமுறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி மற்றும் விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதி ஆகியன மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு பெறுகைக்கும் விலைமனுக்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பெறுகையின் தலைப்பு மற்றும் விலைமனு கொள்முதல் இல. ஆகியன விலைமனுவை சமர்ப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சுகாதார சேவைகள் மாகாண திணைக்களம், 120 நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பெறுகை அலகில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரம் முடிந்தவுடன் விரைவாகவே மூடப்பட்டு விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை அவைகளை கையேற்பதற்கு முன்னராக விரும்பின், இலவசமாக பரீட்சிக்கலாம் அல்லது திருகோணமலை, கிழக்கு மாகாணம், சுகாதார சேவைகள் மாகாண திணைக்களம், பிரதான கணக்காளரிடமிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 026-2227438, 026-2222662 நீடிப்பு 207).
7. மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் அல்லது முழுமையான பெறுகையையும் இரத்துச் செய்வதற்கான உரிமையையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் விலைமனுவின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையையும் கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கிழக்கு மாகாணம்.**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377


## விலைமனுக்கோரல்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

**விலைமனுக்கோரல் இலக்கம் : 2023/11**

கருத்திட்டத்தின் தலைப்பு : இலங்கை பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு Redundant Infrastructure Solution உட்கட்டமைப்பு தொகுதியை வடிவமைத்தல், வழங்கல் செய்தல்,பொருத்துதல் மற்றும் பராமரிப்புச் செய்தல்.

பதிவாளர் நாயகம் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் பின்வருமாறு 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு Redundant Infrastructure Solution உட்கட்டமைப்பு தொகுதியை வடிவமைத்தல், வழங்கல் செய்தல்,பொருத்துதல் மற்றும் பராமரிப்புச் செய்வதற்குத் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. கொள்முதல் வழிகாட்டுதல்களின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள தேசிய போட்டி அடிப்படையில் (NCB) விலைமனு கோரல் நடாத்தப்படும்.

1. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கான தேவைப்பாடுகள் பின்வருமாறு,
   - இலங்கையில் செல்லுபடியாகும் வர்த்தகப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் Redundant Infrastructure Solution உட்கட்டமைப்பு அல்லது அதன் ஒத்த தன்மையை வடிவமைத்து செயற்படுத்துவதில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் குறைந்தபட்சம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதனை ஒத்த கருத்திட்டப்பணிகளை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   - சர்வர்கள், சுவிட்கள் மற்றும் பிற பொருட்களுக்கு உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் (MAL) வழங்கப்படல் வேண்டும்.
2. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை தகவல் தொழில்நுட்பப் பிரிவில் (தொடர்பு இலக்கம் 0112889518), பத்தரமுல்லை, 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வழங்கல் பிரிவின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை அதே முகவரியில் வேலை நாட்களில் 2024 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ. 12,500 தொகையை சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் தனித்தனியாக முத்திரையிடப்பட்டு (கடித உறை 1 தகைமைகள் மற்றும் அனுபவம் கடித உறை 2 - விலைமனு. கடித உறைகள் சரியாக கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என பெயரிடப்படல் வேண்டும்.) அந்தக் கடித உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டு தலைவர், திணைக்கள கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு 2024 ஆகஸ்ட் 22 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமுகமளித்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் அதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு Redundant Infrastructure Solution உட்கட்டமைப்பு தொகுதியை வடிவமைத்தல், வழங்கல் செய்தல்,பொருத்துதல் மற்றும் பராமரிப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். கொடுப்பனவு செய்யப்பட்ட ரசீதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் செல்லுபடியான விலைமனுக்களாக கருதப்படும்.
4. எல்லா விலைமனுக்களும், விலைமனு பிணைமுறியொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா.500,000/- பெறுமதியைக் கொண்ட 2024 டிசம்பர் 30ஆம் திகதி வரை செல்லுபடியான(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட) இலங்கையில் இயங்கும் வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். அல்லது காசாக சிறாப்பரிடம் வைப்பிலிடலாம்.
5. 2024 டிசம்பர் 02ஆம் திகதி வரை விலைமனு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
6. விலைமனு முன் சந்திப்பொன்று 2024 ஆகஸ்ட் 09 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பிரதான அலுவலகத்தில் நடைபெறும். கள விஜயம் விலைமனு முன்சந்திப்புக் கூட்டத்திற்கு முன்னர் ஒழுங்கு செய்யப்படும்.
7. விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்கள கொள்முதல் குழுவுக்கு உண்டு.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு**
**பதிவாளர் நாயகம் திணைக்களம் - இலங்கை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### வென்னப்புவ புனித ஜோசவ் வாஸ் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கு கட்டிடத்தொகுதியின் மீதி வேலைகளின் கட்டுமானம்

**(Contract No.; DSD/PRO/03/03/59-2024)**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 25 மில்லியன் ரூபா அடிப்படை ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமானதும் 'வென்னப்புவ புனித ஜோசவ் வாஸ் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கு கட்டிடத்தொகுதியின் மீதி வேலைகளின் கட்டுமானத்திற்காக' கொழும்பு-7, பிலிப் குணவர்தன மாவத்தை, 9 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   இவ்வேலையானது வரைபடங்கள், விபரக்கூற்றுக்கள் மற்றும் அளவுப்பட்டியல் ஆகியவற்றில் விபரிக்கப்பட்டவாறு அலுமீனிய கதவுகள், யன்னல்கள் மற்றும் லூவர் பெனல்கள் ஆகியவற்றை வழங்கல், இணைத்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றை அடக்குகின்றது. கட்டுமான கால எல்லையானது 60 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.
   - பிரதான ஒப்பந்தக்காரருக்கு தேவைப்படும் ICTAD பதிவு
     **விஷேடத்துவம்: விஷேடத்துவமுள்ள கட்டுமான ஒப்பந்தக்காரர்கள் (எஸ்பி-சி) அலுமீனியம் மற்றும் மெருகூட்டல் (ஏ மற்றும் எவ்)**
     **தரம் : எஸ்பி 2 மற்றும் எஸ்பி 3**
   - விலைமனு ஆவணங்களை கையேற்கும் வேளையில் செயற்றிட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவானது 5,000,000 ரூபாவிற்கு மேற்படின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   - கடந்த ஏழு வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 225 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த 7 வருடங்களில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் நிகரான நிர்மாண வேலையின் அனுபவம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 9 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியில் சேவைகளின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2024.08.01 ஆம் திகதியிலிருந்து 2024.08.21 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணத்தை பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 011-2669884)
5. 2024.08.01 ஆம் திகதியிலிருந்து 2024.08.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபா) விளையாட்டு திணைக்கள சிறாப்பரிடம் செலுத்திய பின்னர் கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 9 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பெறுகைக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை உங்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும்).
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரிக்கு 2024.08.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். (விலைமனுவானது விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள 2 ஆம் மாடியின் பெறுகைக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்). தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 250,000 ரூபாவுக்கானதும் (இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா) இலங்கையில் செயற்படுவதும் மத்திய வங்கியினால் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான பிணைமுறியொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. பிணைமுறியானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 9, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**

# ஒலிம்பிக் தடகளப் போட்டிகள் இன்று ஆரம்பம்: இலங்கையின் மூவர் பங்கேற்பு



பாரிஸ் ஒலிம்பிக் தடகளப் போட்டிகள் இன்று (1) ஸ்டே டி பிரான்ஸ் அரங்கில் ஆரம்பமாகவுள்ளன. இதில் இலங்கையின் மூன்று வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

பாரிஸ் ஒலிம்பிக்கின் முக்கிய போட்டி நிகழ்வான தடகள போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் 48 போட்டி நிகழ்ச்சிகளில் மொத்தம் 1,810 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

தடகள போட்டிகளில் இலங்கை சார்பில் முதல் போட்டியில் மத்திய தூர ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரத்ன முதல் பேட்டியில் பங்கேற்கவுள்ளார். ஹான்சூவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தருஷி கருணாரத்ன பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆரம்ப சுற்றில் நாளை (2) களமிறங்கவுள்ளார்.

தொடர்ந்து சர்வதேச ரீதியில் பதக்கம் வென்றிருக்கும் அருண தர்ஷன முதல் முறையாக எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டியில் களமிறங்குகிறார். அவர் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் ஆரம்ப சுற்றில் பங்கேற்கிறார்.

ஹான்சூ ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற டில்ஹானி லேகம்கே எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

தருஷி, அருண மற்றும் டில்ஹானி ஆகியோர் தற்போது பாரிஸ் நகரில் தமது ஆரம்ப சுற்று போட்டிகளுக்கான பயிற்சிகள் மற்றும் தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தத்தமது போட்டியில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறுவதை இலக்காகக் கொண்டே தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

'தனிப்பட்ட போட்டித் திறமையை அடைவதே எமது இலக்காக உள்ளது. எம்மால் நிர்ணயிக்க முடியுமான சாத்தியமான இலக்காக அது உள்ளது' என்று அருண தர்ஷனவின் பயிற்சியாளர் அசங்க ராஜகருணா பாரிஸ் நகரில் இருந்து குறிப்பிட்டுள்ளார்.

இதில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அருண தர்ஷயனவின் சிறந்த காலம் 45.45 ஆக இருப்பதாடு, இந்தப் போட்டியில் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 48 வீரர்களில் 46 ஆவது வீரராகவே அவர் ஒலிம்பிக் தகுதியை பெற்றிருந்தார்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தருஷியின் சிறந்த காலம் 2:00.66 நிமிடம் என்பதோடு பெண்களுக்கான ஈட்டி எறிதலில் லேகம்கே 61.57 மீற்றர் வீசியதே சிறந்ததாக உள்ளது.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் மூன்று மெய்வல்லுனர்களுடன் இலங்கை சார்பில் ஆறு பேர் பங்கேற்றுள்ளனர். எனினும் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு பூப்பந்து போட்டியில் பங்கேற்ற விரேன் நெத்தசிங்க மற்றும் நீச்சல் போட்டியில் பங்கேற்ற கைல் அபேசிங்க, கங்கா செனவிரத்ன ஆகியோர் ஆரம்ப சுற்றுடன் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து வெளியேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை: பிராந்தியத்தில் போர் மேகம்

## பழிதீர்ப்பது ஈரானின் கடமை என்கிறார் உயர்மட்டத் தலைவர்

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் வைத்து ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்ட நிலையில் காசா போரை ஒட்டி பிராந்தியத்தில் போர் பதற்றம் முன்னர் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

இந்த படுகொலையின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக ஹமாஸ் அமைப்பு மற்றும் ஈரான் குற்றம்சாட்டும் நிலையில், ஈரான் மண்ணில் இடம்பெற்ற இந்தப் படுகொலைக்கு பழிதீர்க்கும் கடமை ஈரான் உடையது என்று ஈரான் உயர்மட்டத் தலைவர் அலி கமனெய் குறிப்பிட்டிருப்பதோடு ஈரான் மற்றும் அதன் கூட்டணிகளிடம் இருந்து இஸ்ரேல் கடுமையான மற்றும் வலிமிகுந்த பதில் ஒன்றை எதிர்கொள்ளும் என்று ஈரான் புரட்சிக் காவல் படை எச்சரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஈரான் புதிய ஜனாதிபதி மசூத் பெசஷ்கியானின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக அங்கு சென்ற ஹனியே, நேற்று அதிகாலை 2 மணி அளவில் அவர் தங்கியிருந்த கட்டடம் தாக்கப்பட்ட நிலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை ஹமாஸ் அமைப்பு உறுதி செய்துள்ளது. இதன்போது அவரது மெய்க்காவலர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

'இஸ்லாமிய போராட்ட அமைப்பான ஹமாஸ், எமது பலஸ்தீன மக்கள், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் மற்றும் உலகின் அனைத்து சுதந்திர மக்களுடன் இணைந்து டெஹ்ரானில் உள்ள தனது குடியிருப்பின் மீது சியோனிச தாக்குதல ஒன்றில் கொல்லப்பட்ட அமைப்பின் தலைவர் முஜாஹித் இஸ்மைல் ஹனியேவின் உயிர்த் தியாகத்திற்கு துக்கம் அனுஷ்டிக்கிறது' என்று ஹமாஸ் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹனியேவின் படுகொலை தொடர்பில் ஈரான் தொடர்ந்தும் ஆய்வு நடத்தி வருவதாக லெபனானுக்கான ஈரான் தூதுவர் மொஜ்தபா அபானி நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து உடன் உறுதி செய்யப்படாதபோதும் இலக்கை நோக்கிச் செல்லும் வழிப்படு ஏவுகணை ஒன்றின் மூலம் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக ஈரானிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

டெஹ்ரானின் வடக்கில் உள்ள படை வீரர்களுக்கான குடியிருப்பு ஒன்றில் ஹனியே தங்கி இருந்ததாகவும் வானில் இருந்து வீசப்பட்ட ஏவுகணை ஒன்றினால் அவர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஈரான் புரட்சிக் காவல் படையுடன் தொடர்புபட்ட பார்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் படுகொலை தொடர்பில் வழக்கம்போல் இஸ்ரேல் மௌனம் காத்து வரும் நிலையில், இது தொடர்பில் கருத்துக் கூற வேண்டாம் என்று அமைச்சர்களுக்கு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவுறுத்தி இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் தீவிர வலதுசாரியான மரபுரிமை அமைச்சர் அமிசாய் எலியாகு, ஹமாஸ் தலைவரின் மரணத்தை கொண்டாடும் வகையில் 'எக்ஸ்' சமூகதளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். 'இந்தக் கொலை உலகை சற்று மேம்படுத்தி விடும்' அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டார், ரஷ்யா, துருக்கி, சீனா உட்பட பால நாடுகளும் இந்தப் படுகொலையை கண்டித்துள்ளன.

இதனை ஒரு கோழைத்தனமான செயல் என்று சாடிய பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், அபாயகரமான நிலையை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார். ஹனியேவின் படுகொலை எதிர்ப்புப் போராளிகளின் 'உறுதி மற்றும் பிடிவாதத்தை ஊக்கப்படுத்துவதோடு இஸ்ரேலுக்கு எதிராக போரிடுவதில் அவர்களின் தீர்மானத்தை வலுப்பெறச் செய்கிறது என்று லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படை வெளியிட்ட அறிவிப்பில், இந்தக் கொலை அபாயகரமான நிகழ்வு ஒன்று என்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்திலும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது.

### இஸ்ரேலை பாதுகாப்போம்

பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின், இஸ்ரேல் தாக்கப்பட்டால் அமெரிக்கா அதனை பாதுகாக்க உதவும் என்று உறுதி அளித்தார்.

'போர் ஒன்று ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. அதில் நான் உறுதியாக இருக்கிறேன். எப்போதுமே இராஜதந்திரத்திற்கு வழி மற்றும் வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன்' என்று பிலிப்பைன்ஸ் சென்றிருக்கும் ஒஸ்டின் குறிப்பிட்டுள்ளார்.

எந்த ஒரு நிலைமைக்கும் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன் குறிப்பிட்டுள்ளார். இராணுவத் தளம் ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டபோதே அவர் அதனை குறிப்பிட்டுள்ளார். 'எமக்குப் போர் தேவையில்லை, ஆனால் சாத்தியமான அனைத்துக்கும் நாம் தயாராகி வருகிறோம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹனியோவின் மரணத்திற்காக ஈரானில் மூன்று நாள் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது. 'குற்றவாளியும் பயங்கரவாதியுமான சியோனிஸ அரசு கடுமையான தண்டனையை எதிர்கொள்ளும்' என்று குறிப்பிட்ட உயர்மட்டத் தலைவர் அலி கமனெய், 'ஹமாஸ் தலைவரின் இரத்தத்திற்கு பழி தீர்ப்பது கடைமை என்று ஈரான் கருதுகிறது' என்றார்.

ஹனியேவின் இறுதிச் சடங்கு இன்று (01) டெஹ்ரானில் இடம்பெறவுள்ளதோடு இதனை அடுத்து அவரது உடல் கட்டார் தலைநகர் டோஹாவுக்கு எடுத்தச் செல்லப்படவிருப்பதாக ஹமாஸ் அமைப்பு டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை டோஹாவில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படவிருப்பதாகவும் அது கூறியது.

ஹனியோவின் படுகொலையை அடுத்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நேற்று பொது வேலை நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது. 'இந்தச் செய்தி இடிமின்னல் போன்று இருக்கிறது, நம்பமுடியவில்லை' என்று மத்திய காசா நகரின் குடியிருப்பாளரான 35 வயது வயில் குதை குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீனர்களின் இரத்தம் மலிவானது என்பதையே ஹனியேவின் படுகொலை காட்டுகிறது என்று ரமல்லாவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியரான 45 வயதான ஹொசம் அப்தல் ரசாக் தெரிவித்துள்ளார்.

'ஈரானில் இஸ்மைல் ஹனியேவின் படுகொலை, பலஸ்தீன மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதையும், எமது இரத்தம் மலிவானது என்பதையும், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் எம்மை அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு விற்றிருப்பதையும் நிரூபிப்பதாக உள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### காசாவில் மேலும் 45 பேர் பலி

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் அதேநேரம் லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் ஒன்றில் ஹிஸ்புல்லா முன்னணி தளபதி ஒருவரை இலக்கு வைத்து இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தி சில மணி நேரத்திலேயே ஹனியே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி புவாத் ஷுக்ர் இலக்கு வைக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியது. தாக்குதலுக்கு உள்ளான கட்டடத்தில் அவர் இருந்ததை ஹிஸ்புல்லா உறுதி செய்த போதும் அவருக்கு என்ன ஆனது என்பது குறித்து எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

இஸ்ரேல் கட்டுப்பாட்டு கோலன் குன்றில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற ரொக்கெட் தாக்குதல் ஒன்றில் 12 சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இஸ்ரேலின் லெபனான் எல்லையில் பதற்றம் உச்சம் பெற்றுள்ளது.

இந்த ரொக்கெட் தாக்குதலின் பின்னணியில் புவாத் ஷுக்ர் இருப்பதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது. பெய்ரூட் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் இரு பெண்கள் மற்றும் இரு குழந்தைகள் உட்பட நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

'எதிரி பொறுப்பற்ற மற்றும் பைத்தியக்காரத்தனமாக கொலைகார குற்றத்தை தொடர்ந்தால் நிலைமை கைமீறிப் போய்விடும்' என்று லெபனான் பிரதமர் நயிப் மிகாத்தி நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எச்சரித்துள்ளார்.

299 ஆவது நாளாகவும் காசாவில் இஸ்ரேல் நேற்றும் தாக்குதல்களை நடத்தி இருந்தது. ரபா நகரின் மேற்கே அல் மவாசியில் வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்திய குண்டுத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டிருப்பதாக சுகாதார வட்டாரங்களை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் 45 பேர் கொல்லப்பட்டு மேலும் 77 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,445 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 91,073 பேர் காயமடைந்துள்ளனர்.

காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் இஸ்மைல் ஹனியே முக்கிய பங்கு வகித்து வந்த நிலையில் அவரது படுகொலை அந்தப் பேச்சுவார்த்தையிலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் ரோமில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை வெற்றிபெறக் கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் அண்மையில் குறிப்பிட்டிருந்தனர். எனினும் ஹனியேவின் படுகொலையை அடுத்து அதில் முன்னேற்றம் காண்பது கடினமாகியுள்ளது.

போர் நிறுத்தம் ஒன்றுக்கான பலஸ்தீன பேச்சுவார்த்தை குழுவை இஸ்ரேல இலக்கு வைக்கும் நிலையில் அமைதிப் பேச்சுகளின் சாத்தியம் பற்றி கவலை எழுகிறது என்று கட்டார் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஷெய்க் முஹமது பின் ஜசீம் அல் தானி குறிப்பிட்டுள்ளார்.

## இஸ்மைல் ஹனியே



காசாவில் உள்ள அகதி முகாம் ஒன்றில் 1963 ஆம் ஆண்டு பிறந்த இஸ்மைல் ஹனியே ஹமாஸ் அமைப்பின் ஆரம்பம் தொடக்கம் அதில் உறுப்பினராக இருந்தவர்.

இஸ்ரேலினால் பல முறை கைது செய்யப்பட்டிருக்கும் ஹனியே, ஒரு தடவை ஆறு மாதங்களுக்கு தெற்கு லெபனானுக்கு வெளியேற்றப்பட்டுள்ளார். 2003 இல் ஹமாஸ் நிறுவனருடன் படுகொலை முயற்சியில் உயிர் தப்பினார்.

மூன்று ஆண்டுகளின் பின் ஹமாஸ் தேர்தலில் வெற்றி பெற்ற பின் பலஸ்தீன பிரதமராக சிறிது காலம் இருந்த போதும் ஹமாஸ் மற்றும் பத்தா உட்பட பலஸ்தீன தரப்புகள் இடையே மோதல் வெடித்தது.

ஒரு நடைமுறைவாதியாக பரவலாகக் கருதப்படும் ஹனியே, பலஸ்தீன போட்டிக் குழுக்களுடன் நல்ல உறவை பேணி வந்தார். 2017 இல் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அண்மைய ஆண்டுகளில் அவர் காசாவில் இருந்து வெளியேறி துருக்கி மற்றும் கட்டாரிலேயே வசித்து வந்தார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அவர் முக்கிய பங்கு வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹனியே படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் காசாவில் உள்ள அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரையும் இஸ்ரேல் படுகொலை செய்தது. வடக்கு காசாவின் ஷட்டி அகதி முகாமில் கடந்த ஜூன் 10 ஆம் திகதி நடத்திய தாக்குதலில் அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் கொல்லப்பட்டனர். ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் தனது குடும்பத்தின் 60 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அப்போது ஹனியே கூறி இருந்தார்.

கடந்த ஏப்ரலில் ஹனியேவின் மூன்று மகன்மார் சென்ற கார் வண்டி தாக்கப்பட்டதில் அவர்கள் கொல்லப்பட்டனர். இதில் ஹனியேவின் இரு பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மூன்று பேரக்குழந்தைகளும் கொல்லப்பட்டனர்.

## படுகொலை செய்யப்பட்ட ஹமாஸ் தலைவர்கள்



**1996 ஜனவரி:** ஹமாஸ் ஆயுதப் பிரிவின் தலைவரான யஹ்யா அய்யாஷை காசாவின் பெயித் லஹியாவில் வைத்து இஸ்ரேல் படுகொலை செய்தது.

**2004 மார்ச்:** காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் ஆன்மீகத் தலைவர் மற்றும் நிறுவனர் ஷெய்க் அஹமது யாஸின் படுகொலை செய்யப்பட்டார்.

**2004 எப்ரல்:** யாஸினுக்கு அடுத்து நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் ஹமாஸ் இணை நிறுவனரான அப்தல் அஸீஸ் அல் ரன்டிசி காசா நகரில் வைத்து இஸ்ரேலிய ஹெலி நடத்திய ஏவுகணை தாக்குதலில் கொல்லப்பட்டார்.

**2024 ஜனவரி:** ஹமாஸ் சிரேஷ்ட அதிகாரி சலாஹ் அல் அரூரி, பெய்ரூட்டில் இஸ்ரேலிய ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

**2024 ஜூலை:** ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கேள்விக்கான அறைகூவல்

## சுகாதார அமைச்சு

### மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்கு கேள்வி கோரல் பத்திரங்கள் 2024.08.01 முதல் 2024.08.16 பி.ப. 2.30 வரை விநியோகிக்கப்படுவதுடன் 2024.08.21 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கேள்வி வைப்பை மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி மாதிரிப் பத்திரங்களை மாத்திரம் பாவித்து அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படியை வழங்குவதற்காக கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இரு பிரதிகளுடனான கேள்வி ஆவணங்களை பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி சமர்ப்பிக்கும் உருப்படியை தெளிவாகக் குறிப்பிட்டு 2024 ஓகஸ்ட் 21 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- 2024.08.21 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்து மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
- 2024.08.01 முதல் 2024.08.16 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.15 வரை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
- கேள்விகளைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்துடன் கம்பனியின் பதிவுச் சான்றிதழின் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.08.12 மு.ப. 10.00 இற்கு மாவட்ட பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.
- கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் பெறுகை செயற்பாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு பொருந்துமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து கேள்வி திறக்கப்படும் தினம் அதாவது 2024.08.21 முதல் 2024.11.19 வரையான காலத்திற்கு செல்லுபடியாகுமாறு மருத்துவ அதிகாரி, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை பெயருக்கு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை (Bid Security) அல்லது நிதி வைப்பாக மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
- தேசிய போட்டி கேள்வி முறை (NCB) இன் பிரகாரம் கேள்வி கோரல் மேற்கொள்ளப்படும்.
- தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்விப் பற்றிய இறுதி தீர்மானம் எடுக்கும் உரிமை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

| தொடர் இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை |
|---|---|---|---|---|
| 1 | Suction Apparatus D/J | 3 | 2,000.00 | 21,000.00 |
| 2 | DVT Pumps(lifotronic-airpro)with small size cuffs-3 | 3 | 2,000.00 | 24,000.00 |
| 3 | Infusion syring pumps | 2 | 2,000.00 | 7,000.00 |
| 4 | Flexible cystoscopy | 1 | 2,000.00 | 60,000.00 |
| 5 | F/O Nasolayngoscope | 1 | 2,000.00 | 60,000.00 |
| 6 | Multipara Monitors | 10 | 2,000.00 | 60,000.00 |
| 7 | Holter Monitoring System | 1 | 2,000.00 | 35,000.00 |
| 8 | Infant Radiant Heaters(Neonatal Resuscitation Bed)with Neopuff(warmer with resuscitators,infant) | 1 | 2,000.00 | 20,000.00 |
| 9 | CTG Machine | 5 | 2,000.00 | 30,000.00 |
| 10 | Orthaphatic Theatre Table | 1 | 2,000.00 | 250,000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**

**விசாரணைகள் - கணக்காளர்,**
**055-2276261 - 104**

## யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை அங்காடியினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

**01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரை**

யாழ் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/ தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்தும் மற்றும் பல்பொருள் விற்பனை நிலைய நடாத்துனர்களிடமிருந்தும் 01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையத்தினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
   1. வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றூண்டிச்சாலை.
   2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City).
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 01.08.2024 தொடக்கம் 16.08.2024 வரையான காலப்பகுதியில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 07.08.2024 ம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட 'A" அல்லது 'B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக்கேள்விகள் 16.08.2024 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021-2222261 (Exchange No 204/205) தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## அஞ்சல் திணைக்களம்

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025

அஞ்சல் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகளின் போது சந்தை விலை நடைமுறையின் கீழாக விலைமனுக் கோரி அத்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்கள் பின்வரும் மாகாணங்களிலிருந்து பதிவு செய்து கொள்ளப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| **A - மேல் மாகாணம்** | **D - மத்திய மாகாணம்** | **G - வடமத்திய மாகாணம்** |
| **B - ஊவா மாகாணம்** | **E - வட மாகாணம்** | **H - தென் மாகாணம்** |
| **C - கிழக்கு மாகாணம்** | **F - வடமேல் மாகாணம்** | **I - சப்ரகமுவ மாகாணம்** |

**பதிவு செய்து கொள்ளப்படும் மாகாணங்கள்:**

**பதிவு செய்து கொள்ளப்படும் பொருட்கள் மற்றும் சேவை உருப்படிகள்**

**பொருள் உருப்படிகள்**
**இலக்கம்**

01. காகிதாதிகள்
02. மின்சார துணைப்பாகங்கள்
03. கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்
04. அலுவலக இயந்திர உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
05. நிறுவை, அளவை உபகரணங்கள்
06. தபால் உறைகளை மூடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் (எண்ணெய்யுடன் கூடிய கயிறு, டின் டொக்கட், அரக்கு முத்திரை மற்றும் ஈய முத்திரை)
07. கிருமிநாசினித் திரவங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்
08. கட்டிடப் பொருட்கள்
09. அலுவலகத் தளபாடங்கள் (Office Furniture)
10. வளிச்சீராக்கி இயந்திரம்
11. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை மற்றும் பொலிமர் முத்திரைகள்
12. பித்தளை முத்திரை (தபால் பொதிகளை மூடுவதற்கு உபயோகிக்கப்படும் பித்தளை முத்திரை)
13. தபால் முத்திரை இயந்திரத்திற்கான மை (Frama, FM-100 மற்றும் Posmart இயந்திரங்களுக்கு)
14. கென்வஸ் துணிகள் மற்றும் Polypropylene
15. உறைகளை தைக்கும் இயந்திரம்
16. பொலிசெக் உறைகள்
17. கென்வஸ் உறைகள் / சவல் உறை தோல் உறைகள் உட்பட சகல வகையான உறைகள்
18. சீருடைகளுக்கான துணி
19. தைக்கப்பட்ட சீருடைகள்
20. சப்பாத்து மற்றும் மேஸ்
21. குடைகள், மழை அங்கிகள், தொப்பிகள்
22. அனைத்து வகை வாகனங்களுக்குமான டயர், டியூப் மற்றும் பற்றரி
23. அனைத்து வகையான மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
24. பரிசுப் பொருட்கள் மற்றும் மேம்பாட்டுப் பொருட்கள் (டீசேர்ட்/ கெப்/ பைகள்/ நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை அச்சிடல்)
25. உட்புறம் திணிக்கப்பட்ட கடித உறைகள் (Padded Envelop) மற்றும் பார்சல்களை பொதியிடும் பெட்டிகளை வழங்கல் (Corrugated Boxes உட்பட)
26. முத்திரைகளைப் பாதுகாக்கும் புத்தகங்கள், முதல் நாள் தபாலுறைகளைப் பாதுகாக்கும் புத்தகங்கள், முத்திரைகளை வைக்கும் புத்தகம் மற்றும் முத்திரை இருத்திகள்
27. பொலித்தின் சார்ந்த தயாரிப்புகள்/ செலோபோன் (முத்திரை மற்றும் நினைவுப் படிவங்கள் இருத்திகள்)
28. மின்பிறப்பாக்கிகள்
29. துணி நூல் பந்துகள்

**சேவைகள் மற்றும் நிர்மாண உருப்படிகள்:**
**இலக்கம்**

1. கட்டிட திருத்தவேலைகள், அலுவலக பகுதி பிரிப்பு வேலைகள், நீர்க்குழாய் தொகுதி திருத்தவேலைகள் , மின்சார வலையமைப்பின் திருத்தவேலைகள் மற்றும் சிறிய பராமரிப்பு வேலைகள் - அதிகபட்சம் ரூ. 10,000,000.00 வரை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மூலம் வழங்கப்படும் சான்றிதழுடன் (CIDA) தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
2. கணனி மென்பொருள்
3. பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல்/ முத்திரை பலகைகளின் திருத்தவேலைகள்
4. சீருடைகளைத் தைத்தல்
5. வாகன திருத்தவேலைகள் - பொறிமுறை வேலை, டீசல் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
6. வாகன திருத்தவேலைகள் - வாகன வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
7. வாகன திருத்தவேலைகள் - வாகன டின்கரின் மற்றும் பெயின்ற் வேலை
8. வாகன திருத்தவேலைகள் - வாகன குஷன் வேலை மற்றும் அப்போஸ்ட்ரி வேலை
9. வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் கழுவுதல்
10. மிதி வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி திருத்தவேலைகள்
11. கணனிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல், புகைப்படப்பிரதி இயந்திரம்/ தட்டச்சு இயந்திரங்களின் திருத்தவேலைகள், பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
12. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
13. கதிரைகளை இழைத்தல், அலுவலக உபகரணங்களின் (மரம் மற்றும் உருக்கு) திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல், நிறுவை அளவை உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல்
14. பலகை மற்றும் கொங்கிறீட் கடிதப் பெட்டிகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தவேலைகள்
15. சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழிகளில் அச்சிடும் வேலைகளை மேற்கொள்ளல் (அலங்கார விருதுகள், வவுச்சர்கள், தபாலுறைகள், முதல் நாள் தபாலுறை, பல் வகையான புத்தகங்கள், அறிவிப்புகள், படிவங்கள் போன்றவை)
16. பார்கோட் லேபல் அச்சிடல்
17. தபால் உறைகள் மற்றும் தபால் பொருட்களின் போக்குவரத்திற்குத் தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்
18. விளம்பரப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு - நடவடிக்கைகள்/ படைப்பாற்றல் மிக்க வடிவமைப்புகளைத் தயாரித்தல் மற்றும் மாதிரிகளை நிர்மாணித்தல்
19. உணவு பானங்கள் மற்றும் கேட்டரிங் வசதிகளை வழங்கல்
20. தபால் முத்திரை இயந்திரங்களின் திருத்தவேலைகள் (Frama, FM-100 மற்றும் Posmart இயந்திரங்களுக்கு)
21. அலுவலகத்திற்கு திரைச்சீலைகளை வழங்கல்
22. பீடைகளைக் கட்டுப்படுத்தல்
23. ஸ்டிக்கர் அச்சிடல்
24. துப்புரவேற்பாட்டு சேவைகள் (அஞ்சல் தலைமை அலுவலகத்திற்கு மட்டும்)
25. குஷன் கதிரைகளின் திருத்தவேலைகள் (Cushion Works)
26. பாதுகாப்புச் சேவைகள்
27. உறைகளின் மீது எழுத்துக்களைப் பொறிப்பதற்கு Screen Printing வழங்குதல்
28. புகைப்படப் பிரதி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் - வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்:**

1. வியாபாரம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பத்துடன் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)
2. அந்தந்த நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டுள்ள மாகாணம் மற்றும் வழங்கல் வகுதி என்பன விலைமனு கோரும் போது கவனத்திற் கொள்ளப்படுவதால், நிறுவனம் பதிவு செய்து கொண்டுள்ள வகுதி மற்றும் மாகாணம் என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. கீழே காணப்படும் மாதிரிக்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் மூலமாக மாத்திரமே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவு தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு விண்ணப்பதாரர்களின் தகைமைகள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் திணைக்களத்தின் வழங்குநரொருவராக பதிவு செய்து கொள்ளப்படும்.
5. போலியான ஆவணங்களை சமர்ப்பித்து வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
6. ஏதேனும் உருப்படிகள் கீழாக பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநரிடமிருந்து அல்லது ஒரு வழங்குநர்/ அல்லது பலரின் அல்லது அனைத்து பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து அல்லது வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிற்குப் புறம்பாக விலைமனுக்கள் மூலம் வழங்கல்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை அஞ்சலதிபர் தன்னகத்தே கொண்டுள்ளார். இது சவாலுக்குட்படுத்த முடியாத நிபந்தனையற்ற அதிகாரமொன்றாகும்.
7. ஏதேனும் வழங்குநரொருவரின் வழங்கல்கள் பலவீனமாக காணப்படுமிடத்து அல்லது வழங்கல்களை மேற்கொள்ளும் போது மோசடிகளில் ஈடுபடுவது அல்லது ஏதேனும் முறைகேடான விடயங்கள் இடம்பெற்றுள்ளதென அஞ்சலதிபர் கருதும் பட்சத்தில் அவ்வாறான வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலப்படுத்தப்பட்டு, வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து பெயரை அகற்றுவதற்கான முழுமையான அதிகாரத்தை அஞ்சலதிபர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
8. வழங்குநர்களைப் பதிவு செய்வது மற்றும் பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக அரசாங்கத்தால் இதுவரை விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன், வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலில் அல்லது பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களைப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனை நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவரும் முழுமையான அதிகாரத்தை திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.
9. ஏதேனும் கட்டளைகள் வழங்கப்பட்டதன் பின் 30 நாட்கள் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக வழங்குதல் வேண்டும் என்பதுடன் குறித்த கட்டளையை வழங்கும் போது ஏற்படும் போக்குவரத்துச் செலவு போன்ற மேலதிக செலவுகள் இருப்பின் அவை வழங்குநர்களால் ஏற்கப்பட வேண்டும்.
10. ஒரு மாகாணத்திற்கான பதிவுக் கட்டணம் ரூ. 1000.00 (ஒரு மாகாணத்திற்கு அல்லது பலவற்றிற்கு பதிவு செய்து கொள்ளலாம்.) உருப்படியொன்றிற்கான கட்டணம் ரூ. 500.00 ஆகும். (காசுக் கட்டளையொன்றை அஞ்சலதிபர் பெயரில் தலைமையக அஞ்சல் அலுவலகத்தில் மாற்றிக் கொள்ளும் வகையில் அல்லது தலைமையக சிறாப்பரிற்கு ரொக்கப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.)

உங்கள் விண்ணப்பங்களை மாதிரி விண்ணப்பமொன்றாகத் தயரித்து 2024.09.03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கணக்காளர் (பெறுகை) பெறுகைப் பிரிவு (தரை மாடி) அஞ்சல் தலைமையகம், 310, டீ.ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 01000 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-4927249 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் "கணக்காளரைத் (பெறுகை)" தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**அஞ்சலதிபர்,**
**அஞ்சல் திணைக்களம்,**
**310, டீ.ஆர். விஜயவர்தன மாவத்தை,**
**கொழும்பு-01000**

### வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2025

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

01. பதிவு செய்து கொள்ளப்பட்ட எதிர்பார்க்கப்படும் மாகாணம்
(தெரிவு செய்யப்படும் மாகாணம்/ மாகாணங்கள் தொடர்பாக புள்ளடி இடுங்கள்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I |

02. விண்ணப்பிக்கும் உருப்படி
(தெரிவு செய்யப்படும் உருப்படி/ உருப்படிகளுக்கு புள்ளடி இடுங்கள்)

**பொருட்கள்**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | - |

**சேவைகள்**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

03. நிறுவனத்தின் பெயர்:
04. நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ள தன்மை மற்றும் இலக்கம்:
(நிறுவனம் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ள முகவரியின் பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்)
05. நிறுவனத்தின் முகவரி:
06. தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் இலக்கம்/ மின்னஞ்சல் முகவரி:
07. பெசேவ அறவிடுபவரானால் தெளிவாக, பதிவிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்:
08. நிறுவனத்தின் தொடர்புகொள்ளும் அலுவலர்களின் தகவல்கள், பெயர், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி:

மேற்படி தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவையெனவும், அஞ்சல் திணைக்களத்தில் "வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2025" பதிவு செய்து கொள்வதற்கு இயைபான தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்துப் பார்த்து சரியாகப் புரிந்து கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள இணங்குவதாக அறிவிக்கின்றேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

# மக்கள் வங்கி

## கம்பஹா பிராந்தியம்

### மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்

